Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 30 (31.07.2003) வியாழக்கிழமை இதழ்: 301

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சி-1147)

## அரசின் இடைக்கால நிர்வாக யோசனை

# சட்ட நகலை அமைச்சரவையில் இப்போது சமர்ப்பிக்க வேண்டாம்!

## பீரிஸிடம் ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை

(கொழும்பு)

**இடைக்கால நிர்வாகம் குறித்த உத்தேச நகல் சட்டமூலத்தை, தற்போதைக்கு அமைச்சரவையில் சமர்ப்பிக்கவேண்டிய அவசியமில்லை. முழுமையான சட்டவரைபு தயாரித்து முடிந்த பின்னர், அமைச்சரவையில் சமர்ப்பிப்பதே நல்லது என்று, ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

நேற்றிரவு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், இடைக்கால நிர்வாக சபை தொடர்பான சில விடயங்களை, அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினார்.

அதற்கு இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி, சகல அரசியல் கட்சிகளுடன் பேசிய பின்னர் - அமைச்சரவையில் உத்தேச நகல் சட்ட மூலத்தைச் சமர்ப்பிக்குமாறு, அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாயை அடையாளங்காண பொலிஸாரின் உதவி!

யாழ்.நகரில் வைத்து பொதுமகன் ஒருவர், இராணுவச் சிப்பாயினால் தாக்கப்பட்டது தொடர்பாக - விசாரணை நடத்த, யாழ். பொலிஸாரின் ஒத்துழைப்பை மனித உரிமைகள் ஆணைக்குழு நாடியுள்ளது.

நேற்றுமுன்தினம், யாழ். நகரிலுள்ள கடை ஒன்றின் வாசலில் நிறுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளை, ஓரமாக நிறுத்துமாறு ராணுவச் சிப்பாய்க்கு, பணியாளர் ஒருவர் கூறியதையடுத்து, அவர் அப்படையினரால் தாக்கப்பட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



திரைப்படத்துறையில் ஆற்றிய பங்களிப்புக்காக, சிங்களத் திரைப்பட இயக்குநர் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸுக்கு, 'யுனெஸ்கோ' விருது கிடைத்தமையைப் பாராட்டி, கடந்த செவ்வாயன்று ஜனாதிபதி மாளிகையில் நடந்த வைபவத்தில், அவரைப் பாராட்டி கௌரவிக்கும் ஜனாதிபதி சந்திரிகா.

## நோர்வே அமைச்சர் ஹெல்கிஸன் தமிழ் கட்சிகளையும் சந்திப்பார்!

அடுத்த வாரம் கொழும்பு வரவுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் - இடைக்கால நிர்வாகம் தொடர்பாகவும், அதுகுறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நோக்கிலும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும், ஜனாதிபதி சந்திரிகாவையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை - வன்னி சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் ஹெல்கிஸன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனவும், தமிழ்க்கட்சிகள் உட்பட ஏனைய அரசியல் கட்சிகளையும் அவர் சந்தித்து, இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேசவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

### விண்ணாணம் விநாசியர்



உவவுக்கு, நேரத்துக்கு ஒரு கதை பாருங்கோ....!

## ஜப்பானிய பிரதி வெளியுறவு அமைச்சர் வார இறுதியில் யாழ்ப்பாணம் வருகை!

ஜப்பானிய பிரதி வெளிவிவகார அமைச்சர், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 3 ஆம், 4 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தரும் ஜப்பானிய பிரதி வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷிறோ ஓட்சுகா, தனது விஜயத்தின் ஒரு பகுதியாகவே யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ். வரும் இவர், இங்குள்ள அகதிமுகாம்களுக்கும், புனர்வாழ்வு நிலையங்களுக்கும் விஜயம்செய்து, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவதுடன், இங்குள்ள நிலைமைகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளார்.

அத்துடன், இலங்கையில் தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும், தனது கருத்தினை, யாழ்ப்பாணத்தில் வெளியிடலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ்.குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு; பிரிட்டிஷ் தூதரகக் குழு ஆராய்வு!

### மாவட்ட நீதிபதியையும் சந்தித்துப் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த பிரித்தானியத் தூதரக உயர் அதிகாரிகள் - குடாநாட்டு சட்ட, ஒழுங்கு நிலைமைகள் பற்றி ஆராய்ந்தனர். இந்தக் குழுவினர், யாழ்.செயலக உயர் அதிகாரிகளைச் சந்தித்து இதுகுறித்துக் கலந்துரையாடினர்

இந்தச் சந்திப்பில், பிரித்தானியாவின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் பீற்றர் ஹியூக்னஸ், பிரித்தானியாவின் பொலிஸ் ஆலோசக உயர் அதிகாரியான ஜியோ பிரேட்மர் ஆகியோருடன் மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல், திட்டப்பணிப்பாளர் சுந்தரம் பிள்ளை உட்படப் பலர் பங்கேற்றனர்.

யாழ்.குடாநாட்டில் - சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் நடவடிக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத் தேவைகள் தொடர்பாக அதிகாரிகள் மட்டத்தில் நேற்று ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தி மற்றும் திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான, உயர்மட்டக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நேற்று பி.ப.2.00 மணிக்கு, நாவலர் கலாசார மண்டபத்தில், விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், அரச அதிபர் செ.பத்மநாதன், திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மற்றும் திணைக்களங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதி - ஒன்றிணைத்த அபிவிருத்தியின் எண்ணக்கருக்கள் பற்றி விளக்கமளித்தார்.

தொடர்ந்து - குடாநாட்டின் அத்தியாவசியத் தேவைகளான - கல்வி, வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் - பாதிப்படைந்துள்ள குடாநாட்டின் நீர்வளம், நிலவளம் பற்றிய அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது.

குடாநாட்டு மக்களின் தேவைகளைக் கண்டறிந்து, ஒன்றிணைந்த அடிப்படையில் - சமுக, பொருளாதார கட்டுமானங்களில் சிதைவுகள் ஏற்படாமலும், அரசியல் ரீதியான பாதிப்புகளுக்கு இடமளிக்காமலும்

(10 ஆம் பக்கம் பார்க்க)




## ரேடியேட்டர் நீர் பாய்ந்து சாரதி பரிதாபகர மரணம்!

### குடத்தனை விபத்தில் அவலம்

(யாழ்ப்பாணம்)

ரேடியேட்டரின் கொதிநீர் உடலில் சிந்தியதால், எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபரொருவர், பரிதாபகரமான முறையில் மரணமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் - மணற்காட்டைச் சேர்ந்த ஓனஸ்ட் போல் அல்பிரட் அமலதாஸ் (வயது 45) என்ற வாகனச்சாரதியே மரணமானவராவார்.

சம்பவதினத்தன்று, வாகனச் சாரதி - குடத்தனை வீதி வழியாக வாகனத்தை ஓட்டிச்சென்றபோது - தவறுதலாக வாகனம் தடம்புரண்டதில், ரேடியேட்டர் கொதிநீரால், உடலில் எரிகாயங்கள் ஏற்பட்டு, மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் - மேலதிக சிகிச்சைக்காக, யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்ட இவர், அங்கு சிகிச்சையளிக்கப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மரணமானார்.

(ரா,111)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
(சி -1139)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு

## வடக்கு - கிழக்கு மாகாண சபை

### வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு
### அபிவிருத்தித் திட்டம் (NECORD)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ அவ" கடன் இல. 1846 - SRI (SF)

# கேள்வி அறிவித்தல் - 20

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்காக இந்த கடனின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில்தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்ட கேள்விச்சபையின் தலைவர் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.

## அட்டவணை

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த Ictad பதிவு | கூறுவிலை பிணைப் பணம், (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD/RD/01 | வடமராட்சி கிழக்கு பகுதி செம்பியன்பற்று வடக்கு - கட்டக்காடு 19.19 கிலோமீற்றர் மீன்பிடி வீதி சீரமைத்தல் (தொகுதி 1) | M 6 | 53,000/= |
| | | வடமராட்சி கிழக்கு பகுதி செம்பியன்பற்று வடக்கு - கட்டக்காடு 19.19 கிலோமீற்றர் மீன்பிடி வீதி சீரமைத்தல் (தொகுதி 2) | M7 | 48,000/= |
| | | வடமராட்சி கிழக்கு பகுதி செம்பியன்பற்று வடக்கு - கட்டக்காடு 19.19 கிலோமீற்றர் மீன்பிடி வீதி சீரமைத்தல் (தொகுதி 3) | M7 | 43,000/= |
| 02 | MN/NECORD/IR/01 | மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம் சின்ன உடைப்பு பிரதான கால்வாய் புனர்நிர்மாணம் (தொகுதி 1) | M6 | 61,000/= |
| | | மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம் சின்ன உடைப்பு பிரதான கால்வாய் புனர்நிர்மாணம் (தொகுதி 2) | M6 | 57,000/= |
| | | மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக்குளம் சின்ன உடைப்பு பிரதான கால்வாய் புனர்நிர்மாணம் (தொகுதி 3) | M7 | 23,000/= |
| 03 | VA/NECORD/HS/08 | வவுனியா 48 கட்டில்கள் கொண்ட வாட்டுடன் தளவைத்திய சாலை அமைத்தல் | M8 | 85,000/= |
| 04 | AM/NECORD/IR/01 | அம்பாறை மாவட்ட சடையந்தலாவை நீர்ப்பாசனத்திட்ட புனரமைப்பு - (தொகுதி 2) வாய்க்கால் அமைப்பு. | M8 | 58,000/= |
| 05 | AM/NECORD/IR/02 | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - (தொகுதி 2) வாய்க்கால் அமைப்பு | M7 | 46,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - (தொகுதி 3) வாய்க்கால் அமைப்பு. | M7 | 34,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - (தொகுதி 4) வாய்க்கால் அமைப்பு. | M7 | 33,000/= |
| | | அம்பாறை மாவட்ட கஞ்சிகுடிச்சாறு நீர்ப்பாசனத் திட்டம் புனரமைப்பு - (தொகுதி 5) வாய்க்கால் அமைப்பு. | M7 | 30,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ள உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ('ICTAD' உடன் மேற்படி M 7க்கு மேலே பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருக்கவேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்ததன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக்கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் ஆதரவளிக்கப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்விகோரும் ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்திறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்கவேண்டும்.

4. மேற்படி பந்தி 2 இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பகுதிகளுக்கு கேள்வி கோரலாம். ஒவ்வொரு ஒப்பந்தம் விடயமும் புறம்பான கேள்வியாக அமையவேண்டும். ஏதேனும் ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை நிகோட் திட்டத்தின் கீழ் நடைமுறையிலிருக்கும் ஒப்பந்தம் உட்பட மூன்றாகும்.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர் மேலதிக தகவல்களை கேள்விப்படிவத்திலிருந்து பெறமுடியும் என்பதுடன், கேள்வி ஆவணங்களை வடக்கு - கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (NECORD), 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற விலாசத்திலுள்ள திட்டப்பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்வி ஆனவங்களை 31-07-2003 இலிருந்து 13 - 08 - 2003 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலைநாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து இது தொடர்பாக மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.1000/= த்தை (கேள்வி ஆணவம் ஒன்றுக்கு ) செலுத்தி கொள்வனவு செய்துகொள்ளலாம்.

7. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு முத்திரையிடப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கவேண்டும்.

8. பொறிவைத்த கேள்விகள் தலைவர், திட்ட கேள்விச்சபை, NECORD, 140, மின்சார நிலைய வீதி, திருகோணமலைக்கு 18 - 08 - 2003 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

9. முன்கூட்டியே கேள்விகோருவோர் கூட்டமொன்று 11 - 08 - 2003 அன்று மாலை 2.00 மணிக்கு எமது அலுவலகத்தில் நடைபெறும்

10. கேள்விகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு,**
**அபிவிருத்தித் திட்ட கேள்விச்சபைத் தலைவர்,**
**140, மின்சார நிலைய வீதி,**
**திருகோணமலை.**

(சி-1281)

# இடைக்கால நிர்வாகம் பற்றி விளக்குவதற்கு பிரதமரும் - அமைச்சர்களும் தவறிவிட்டனர்!

## ஜனாதிபதி செயலகம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக - உண்மையான விபரங்களை, ஜனாதிபதிக்கு விளக்க, பிரதமரும் சில அமைச்சர்களும் தவறிவிட்டதாக, ஜனாதிபதி செயலகம் குற்றம்சாட்டியுள்ளது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஜனாதிபதிக்கும் அனுப்பிவைக்கப்பட்ட அறிக்கைகளுக்கு இடையில் வேறுபாடு இருப்பதாகவும், ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இறைமைக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சிக்கல்கள் குறித்தும், ஜனாதிபதிக்குப் பிரதமர் அலுவலகம் தவறான அறிக்கைகளை அனுப்பியது குறித்தும், ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிகவும் முக்கியமான விடயங்கள குறித்து, இருவேறுபட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளமை- நாட்டிற்கும், அரசமைப்பிற்கும் நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

மேலும், இருவேறுபட்ட அறிக்கைகள் ஜனாதிபதிக்கும் புலிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்த அறிக்கைகளில் காணப்படும் விடயங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தவும் அரசாங்கம் தவறிவிட்டதாக, ஜனாதிபதி செயலகம் குற்றம் சாட்டியுள்ளது.

# குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்றப்படாது புலிகளின் திருமலை அலுவலகம் அறிவிப்பு

குரங்குப்பாஞ்சான்குள முகாம் அகற்றப்படமாட்டாதென, தமிழீழ விடுதலைப் புலிகளின் - திருகோணமலை மாவட்ட அரசியற்துறை அலுவலகம் அறிவித்துள்ளது. இந்த முகாம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளதால், அதனை அகற்றவேண்டிய தேவை ஏற்படாது என்றும் அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய குரங்குப்பாஞ்சான் முகாம் 72 மணித்தியாலங்களுக்குள் அகற்றப்படும் என வெளியாகிய செய்திகளில் எதுவித உண்மையும் இல்லையென்றும் - திருகோணமலை மாவட்ட அரசியற்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குரங்குப்பாஞ்சான் குளம் அமைந்துள்ள பகுதிக்கு விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் விஜயம் செய்யவுள்ளார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால், ஆண் - பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விருப்பமுடைய, சங்கத்தில் பதிவுதாரராயிருக்கும் விளையாட்டுக் கழகங்கள்- தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சங்கத்தின் செயலரிடமோ அல்லது விளையாட்டுக் குழுத் தலைவரிடமோ விண்ணப்பங்களைப் பெற்று, பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# தப்பியோடிய 50 ஆயிரம் படையினருக்கு விலகல் சான்றிதழ் வழங்கும் திட்டம்

## செப்ரெம்பர் மாதம் முதல் நடைமுறை

(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஐம்பதாயிரம் படையினருக்கு- விலகல் சான்றிதழ் வழங்கும் திட்டம், செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக, இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி, கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடுப்புச் சான்றிதழ் வழங்கும் திட்டம் - கம்பஹா மாவட்டத்தில நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னர், அடுத்தமாதம், இங்கு பெரியளவிலான இராணுவ ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் மட்டும்- ஐயாயிரம் பேர் இராணுவத்தை விட்டுத் தப்பியோடியுள்ளதாலேயே, முதற கட்டமாக, இந்தத் திட்டம் இங்கு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தப்பியோடிய படையினருக்கு விலகல் சான்றிதழ் வழங்கப்படும் திட்டம் - மாவட்டச் செயலகரீதியாகவும், பிரதேச செயலகரீதியாகவும் அமுல் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக - பத்திரிகை விளம்பரம், அடுத்த மாதம் இராணுவத் தலைமையகத்தினால் வெளியிடப்படும் என்றும், இதன் பின்னர் இரண்டு வாரகால அவகாசத்துக்குள் விலகல் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவத்தைவிட்டுத் தப்பியோடியவர்களின் பயிற்சிகளுக்காக, 3.9 பில்லியன் ரூபாவை இராணுவம் செலவிட்டுள்ளது. தப்பியோடிய படையினரில் 67 வீதமானோர் அடிப்படைப் பயிற்சிகளுக்குப் பின்னர், ஒருவருடத்துக்குக் குறைவாகச் சேவையாற்றியவர்கள், எனத் தெரியவருகிறது.

12 சதவீதமானோர் - இராணுவத்தில் 4 முதல் 5 வருடங்கள் சேவையாற்றி, பின்னர் தப்பியோடியதாகவும இராணுவத் தலைமையக அறிக்கைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

# வீடமைப்பு பிரதி அமைச்சருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

மட்டக்களப்பு, ஏறாவூரில் - கடந்த பொதுத்தேர்தலின்போது, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மூவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, வீடமைப்புப் பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத்திற்கு எதிராக, மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பொதுத் தேர்தல் நடைபெற்ற மறுநாள், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் உட்பட ஐந்து பேர் தாக்கப்பட்டதுடன், அவர்களது உடைமைகளும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக - வீடமைப்பு பிரதி அமைச்சருக்கும், அவரது மெய்ப்பாதுகாவலர்களுக்கும் எதிராக, மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக - துணை அமைச்சர் பசீர் சேகுதாவூத் மற்றும் 5 மெய்ப்பாதுகாவலர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது - அவர்களை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல மட்டக்களப்பு மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அனுமதி வழங்கினார்.

(201)

# இழப்பீட்டுக்குப் விண்ணப்பிக்கச்சென்ற சிறுமி மீது எழுதுநர் பாலியல் வல்லுறவு!

(கொழும்பு)

வெள்ள இழப்பீட்டுக்கு விண்ணப்பிக்கச்சென்ற பெண் ஒருவரின், பத்து வயதான மகளை - தென்னிலங்கையின் முன்னணி அரசியல்வாதி ஒருவரின் எழுதுவினைஞர், பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய சம்பவம் ஒன்று தொடர்பாக, பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த அரசியல்வாதியின் அலுவலகத்துக்குத் தனது தாயாருடன் சென்றபோதே - 57 வயதான எழுதுவினைஞர், பத்து வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக, சிறுமியின் தாயார் பொலிஸாரிடம் புகார் செய்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக, குறித்த அரசியல்வாதியின் அலுவலகம் வெளியிட்ட தகவலில் - சிறுமியை வல்லுறவுக்குட்படுத்தியவர், குறிப்பிட்ட அரசியல்வாதியின் இணைப்புச் செயலாளரெனவும், இச்சம்பவத்தையடுத்து அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேற்படி எழுதுவினைஞர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## காரைக்கால் சிவன்கோவில் வருடாந்த உற்சவம்

இணுவில் கிழக்கு- காரைக்கால் சிவன்கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

## பொலிஸ் கொன்ஸ்டபிள் தற்கொலை

மன்னார் - முருங்கனில் பொலிஸ் கொன்ஸ்டபிள் ஒருவர், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

முருங்கன் பத்தாவது வலயத்தில் கடமையாற்றிய பொலிஸ் கொன்ஸ்டபிளே, கடந்த திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்தார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதி கலந்துகொள்ளவிருந்த புலமைப்பரிசில் நிகழ்வு ரத்தானது!

திருமலையில் - நாளை இடம் பெறவிருந்த நாலாயிரம் ஏழை மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ரத்துச்செய்யப்பட்டு, செப்ரெம்பர் மாதத்தில் கொழும்பில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்விற்குச் செல்ல வேண்டாம் என்று, வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கூறியதையடுத்தே, திருமலையில் நடைபெறவிருந்த நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டதாகத் தெரியவருகின்றது.

மிலேனியம் புலமைப்பரிசில் நிதியொதுக்கீடு நேரடியாக ஜனாதிபதியின் நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. இம்முறை இந்நிதி ஒதுக்கீட்டில் - திருமலையைச் சேர்ந்த நாலாயிரத்து 121 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கே, ஜனாதிபதி சந்திரிகா திருமலைக்குச் செல்லவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நியூசிலாந்தில் கறுப்பு ஜூலை

(வெலிங்டன்)

கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வு நியூசிலாந்தில் ஒக்லாந்து மாநகரில் உள்ள **Mt. Roskill Intermediate** பாடசாலை அரங்கில் மிகவும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. இந்த நினைவுகூரும் வைபவத்தில், பல நூற்றுக்கணககான மக்கள் குளிரையும் பொருட்படுத்தாது திரண்டிருந்தனர்.

அகவணக்கத்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மனித உரிமை செயற்பட்டாளர் செல்வி மரியா லீட்பீற்றர் 'உலகத்தில் சமாதான முயற்சிகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற சிறுவர்களின் நடனங்கள் தாயகத்தின் விடுதலையை சித்தரித்தன.

இறுதி நிகழ்ச்சியாக, 'நினைவழியா நாட்கள்' என்னும் தலைப்பில் - 1956 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டுவரை நடைபெற்ற, இனப்படுகொலைகள், பொருளாதார சீர்குலைவு, சொத்து நாசம் என ஒட்டுமொத்த தமிழ் தேசத்தின் மீது தொடுத்த அரச பயங்கரவாத செயல்களை, இலத்திரனியல் முறையில் படமாக காண்பிக்கப்பட்டது. இவ்விபரணம் புலம் பெயர்ந்து வாழும் ஒக்லாந்து தமிழ்மக்களுக்கும், இந்த நிகழ்ச்சியில் திரண்டிருந்த ஏனைய வெளிநாட்டவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அமைந்திருந்தது.







நியூசிலாந்து கறுப்பு ஜூலை நிகழ்வில் மனித உரிமை செயற்பாட்டாளர் மரியா லீட் பீற்றர் உரையாற்றுவதை முதற்படத்திலும், அங்கு இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகளை- இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.

# இந்திய மீனவப்படகில் கடத்திய மோட்டார் சைக்கிள் பறிமுதல்!

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து அனுமதியின்றி கடத்தி வரப்பட்ட மோட்டார் சைக்கிள், பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை, மன்னார்- பேசாலைப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இந்திய மீனவர்களின் உதவியுடன், அவர்களது படகில் கொண்டுவரப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், நடுக்கடலில் மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவருடைய படகிற்கு மாற்றப்பட்டு, பேசாலைக்குக் கொண்டு வரபட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட அந்த மோட்டார் சைக்கிள் பற்றித் தகவல் அறிந்த மன்னார் பொலிஸார்- அனுமதிப்பத்திரமின்றிக் காணப்பட்ட மோட்டார் சைக்கிளை பறிமுதல் செய்துள்ளதுடன், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

**வாக்கிய பஞ்சாங்கப்படி குரு பகவான் கடக ராசியிலிருந்து, சிம்ம ராசிக்கு கடந்த 23ஆம் திகதி 6.29 மணிக்கும், திருக்கணித பஞ்சாங்கப்படி கடந்த 30 ஆம் திகதி பகல் 12.03 மணிக்கும் இடம்பெயர்ந்தார். இவர் 15.08.2004 வரை இந்த ராசியில் இருப்பார். இதையொட்டி 12 ராசிகளுக்கும் உரிய பலன்கள் தொடர்ச்சியாகத் தரப்படுகின்றன.**



## விருச்சிகம்



விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை.

நீங்கள் மிக மிகத் துணிச்சலானவர். இருப்பினும் தற்சமயம் வில்லைப்போல வளைந்திருக்க வேண்டும். 'ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் வாடி இருக்குமாம் கொக்கு' என்பதுபோல், நல்ல காலத்தை எதிர்நோக்கிக் காத்து இருக்கவேண்டிய காலம் இது.

ஏற்கனவே என்ன தொழில் செய்துகொண்டு இருந்தீர்களோ அதையே செய்து கொண்டிருக்க வேண்டும். செய்தொழில் மாற்றங்கள் ஏதும் செய்ய முயலக் கூடாது. புதிய தொழில்கள் தற்சமயம் நல்லதல்ல.

தொழில் அபிவிருத்தி எதுவும் தற்சமயம் முயலக்கூடாது. புதிய முதலீடு எதுவும் வேண்டாம். எண்ணிப் பெரும் நஷ்டங்களைத் தரக் கிரகங்கள் காத்துக்கொண்டு உள்ளன.

நீங்கள் உடல் உழைப்பால் வாழ வேண்டியகாலம். முயற்சி மெய் வருத்தக் கூலி தரும். உங்கள் உடல் உழைப்பிற்கேற்ற கூலி மட்டும் பெறவேண்டிய காலம்.

காலம் விரைவில் வரவிருக்கிறது, காத்திருங்கள். இருப்பதை இழக்காமல் இருக்க ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். புலியைப் போல பதுங்கி இருங்கள். பாயும் காலம்வரை பொறுத்திருங்கள். இறுதி' வெற்றி உங்களுடையதுதான்.

வேலைப்பளு கடுமையாக இருக்கும். இக்கடுமையான வேலைப்பளுதான் உங்களுக்கு எதிர்காலத்துக்கு உதவும் என நினைத்துக் கொண்டு பணியைத் தொடருங்கள். எல்லாம் ஒரு அனுபவம் தானே.

தான் உண்டு, தன் காரியம் உண்டென இருங்கள். குடும்பத்தில் அமைதி காப்பது நல்லது. பெற்றோர் தந்த சொத்துக்களை விற்க வேண்டியிருக்கும். ஆனால், அதனால் சில புதிய சொத்துக்கள் வந்து சேரும்.

இந்த ராசிப் பெண்களை - இந்தக் குருபெயர்ச்சி படாதபாடுபடுத்தும். அவர்கள் எவ்விடயத்திலும் கவனமாக இருக்கவேண்டும். கணவருடன்கருத்து வேறுபாடு ஏற்படும். வேலைக்குச் செல்லும் பெண்கள் உயர் அதிகாரிகளால் பந்தாடப்படுவார்கள். இடமாற்றம் வந்து பயமுறுத்தும். ஆனாலும் வழக்கமான வருமானத்திற்குக் குறைவில்லை. அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு, கைநீட்ட வேண்டாம். சிறைக்கதவுகளின் பின்னால் காலம் தள்ளவேண்டிவரும். இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழுங்கள்.

**ஆடி**

இந்த மாதம் உங்களை ஆட்டி வைக்கும் மாதம். கன்னங்கள் குழிந்து தோன்றும். தாடை எலும்புகள் உயர்ந்து காட்சிதரும். மனதில் அஞ்சாமை தோன்றும். இந்த நிலைப் பாதகங்கள் 16.08.2003 முதல் மாறுதல்கள் அடையத் தோன்றும்.

**ஆவணி**

வீண் அலைச்சல்கள் ஏற்படும். வீண் சண்டை சச்சரவுகள் தோன்றும். உழவுத்தொழில் பயன்களையும் தராது. நஷ்டத்தையும் தராது. இளைய சகோதரருக்கு தீமைகள் பல தோன்றும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ணம் தொடர்பான வியாதிகள் தோன்றும். எங்கே நிம்மதி என்ற நிலை 27.11.2003 வரை நீடிக்கும்.

**புரட்டாதி**

நல்ல கல்வியில் மனம் நாட்டம் கொள்கிறது. அறிவுமிக்க நண்பர்கள் கிடைப்பார்கள். வீடு வாசல் போன்றவை அரிதாகச் சிலருக்குக் கிடைக்கும். எம்பெருமான்களை இருந்த இடத்தில் இருந்தே தோத்திர பாராயணம் செய்துவர நன்மைகள் பெருகும். ஓரளவு இலாபம் கிடைக்கும். இந்த மாதத்தில் உங்கள் எழுதும் திறன், கற்பனை ஆற்றல் மிகுந்து தோன்றும்.

**ஐப்பசி**

சில வழக்குகள் உங்களுக்குச் சாதகமாக முடிந்து, சில பொருட்கள் உங்களுக்கு இலாபமாகக் கிடைக்கும். நம்பிக்கை, நாணயம் மிகுந்த நண்பர்கள் வந்து சேருவார்கள். மனத்துணிவு பெருகும். பொருளாதார நிலை சிறந்து தோன்றும். இம்மாதத்தில் நீங்கள் கிரக தோஷ பரிகாரம் செய்துகொள்ளுங்கள்.

**கார்த்திகை**

உங்கள் வீண் வீரயங்கள் அழிக்கப்படுகின்றன. தெய்வ நம்பிக்கை சிறந்து தோன்றும். செல்வாக்குப் பெருகும். சிலருக்கு அரசு உதவி கிடைக்கும். பகை வெல்லும், வன்மை தோன்றும். அவசரம், ஆத்திரம் அடிக்கடி தோன்றும்.

**மார்கழி**

சாஸ்திரங்களை மற்றவர்களுக்குச் சொல்லும் திறன் ஏற்படும். அதிகமாகச் செலவு செய்வீர்கள். சிலருக்கு முகம், தலை இவற்றில் பருக்கள் கட்டிகள் தோன்றலாம். சிலர் கண் நோய்களினால் கண்ணாடி அணியவேண்டியிருக்கும். சிலருக்கு எழுத்து ஆற்றல் சிறக்கும். கற்பனை வளம்மிக்க கவிதைகளை எழுதுவீர்கள். சிறந்த காரியவாதி என்று பெயர் பெறுவீர்கள். நாவல்கள் படைப்பீர்கள். சங்கீதம், நடனம் ஆகியவற்றில் ஈடுபாடு தோன்றும்.

**தை**

உங்கள் பத்தினியிடம் பகை தோன்றும். பிற பெண்கள் சேர்க்கையால், மனைவியைக் கஷ்டப் படுத்தக்கூடும். வேண்டாம் இந்த அவலம். நண்பர்களிடம் நல்லவன் என்று பெயர் பெறுவீர்கள். சகோதர, சகோதரிகளுக்கு இது நற்காலம்.

**மாசி**

சூதும் வாதும் வேதனை செய்யும். எச்சரிக்கையாக இருங்கள். மக்கள் எதிர்பார்த்த உதவியைச் செய்யமாட்டார்கள். தாயார் நோய் வாய்ப்படுவார். உடல் ஆரோக்கியத்தில் குறைபாடுகள் தோன்றும். எனினும் தெய்வபலத்தினால் தப்பி விடுவீர்கள்.

**பங்குனி**

உங்கள் ஆயுள் நீடிக்கப்படும். ஆனால் வறுமை தோன்றும். விபத்துகள் ஏற்படும். நரம்புத் தளர்ச்சிகள் தோன்றலாம். இன்னும் சிலருக்கு வாயுத் தொல்லைகள் தோன்றும். சிலர் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டியநிலை ஏற்படலாம்.

**சித்திரை**

உங்கள் பகைவர்கள் பொசுக்கப்படுவார்கள்.

**வைகாசி**

உங்கள் மனைவியின் முன்கோபத்தால், உறவினர்களிடம் பகை ஏற்படும். உத்தியோகத்தர்களின் உடல்நலம் பாதிக்கப்படாலம்.

**ஆனி**

ஆயுதங்களைக் கையாளாதீர்கள். அவற்றால் ஆபத்து உண்டு. உஷ்ண நோய்கள் தோன்றும். கண் கோளாறுகள் தோன்றும். அரசின் பகைக்கு ஆளாவீர்கள். சட்ட விரோதமான தொழில்களில் ஈடுபட எண்ணம் தோன்றும்.

(தனு ராசி நாளை தொடரும்)

# ரயில் விபத்தில் 2 மாணவர்கள் பலி

(மன்னார்)

கொழும்பில் நடைபெற்ற புகையிரத விபத்தில் இரு மாணவர்கள் மரணமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு வெள்ளவத்தையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் மன்னாரைச் சேர்ந்த ஆனந்த மைக்கல் (வயது 22) என்ற மாணவனும், கொழும்பைச் சேர்ந்த மற்றுமொரு மாணவருமே மரணமடைந்தோராவர்.

இவர்கள் புகையிரதப் பாதையைக் கடந்துகொண்டிருந்தபோது, எதிரேவந்த புகையிரதத்திலிருந்து தப்பி மறுபக்கம் செல்ல முயன்ற வேளை, மறுபுறத்திலிருந்து வந்த புகையிரதத்தில் சிக்குண்டே இருவரும் கொல்லப்பட்டனர், எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுடன் சென்ற ஏனைய மாணவர்கள் மயிரிழையில் உயிர்தப்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (201)

# சைவ மாநாட்டில் சொற்பொழிவாற்ற சிவமகாலிங்கம் லண்டன் செல்வார்

(யாழ்ப்பாணம்)

சைவமாநாடு ஒன்றில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவதற்கு இந்து சமய விவகார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், அடுத்த மாதம் 11 ஆம் திகதி லண்டன் செல்லவுள்ளார்.

பிரித்தானிய சைவத் திருக்கோயில் ஒன்றியம் நடாத்தும் சைவமாநாடு ஒகஸ்ட் மாதம் 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வுகள் லண்டன் சிவன்கோவிலிலும், இரண்டாவது நாள் நிகழ்வுகள் கனக துர்க்கா அம்மன் கோவிலிலும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து கனடாவில் - இந்து சமயப் பேரவை ஏற்பாட்டில் நடைபெறவுள்ள சேக்கிழார் விழா, திருமறை மாநாடு, நாவலர் சிறை திறப்பு விழா ஆகிய நிகழ்வுகளிலும் சிவமகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## கைதுசெய்ய உத்தரவு

கடந்த பொதுத்தேர்தலில் ஊர்காவற்துறை, நாரந்தனையில் கூட்டமைப்பின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக, ஈ.பி.டி.பியின் நெடுந்தீவு பிரதேசசபை உறுப்பினர் நமசிவாயம் கருணாமூர்த்தியைக் கைதுசெய்யுமாறு, யாழ்.நீதிவான் ரி.விக்னராஜா பிடிவிறாந்து பிறப்பித்துள்ளார்.

## நெடுந்தீவில் விளையாட்டு விழா

உள்ளூராட்சிவார நிகழ்வுகளையொட்டி, நெடுந்தீவு பிரதேசசபையினரால் நடாத்தப்பட்டு வந்த விளையாட்டு நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வு, இன்று வியாழக்கிழமை மாலை 2 மணிமுதல் நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு பிரதேசசபை விசேட ஆணையாளர் ச.பொ.தில்லைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஸ்ணசாமி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து பரிசளிப்புவிழாவும், கலைநிகழ்வும் தனிநாயகம் கலையரங்கில் நடைபெறவுள்ளது. (113)

# அதிபர் பதவி வெற்றிடத்துக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வட்டு. மத்திய கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை, அராலி வடக்கு அ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளை நிரப்புவதற்கு, இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2:1, வகுப்பு 2:11, ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப் படிவத்தினை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கு அமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் உரிய முறைப்படி அனுப்பிவைக்குமாறு, வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## கடவுச்சீட்டு கண்டெடுப்பு

நாரந்தனை வடக்கு, ஊர்காவற்துறையைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை ஜஸ்டின் விமலகுமார் என்பவரது தேசிய அடையாள அட்டையும், கடவுச்சீட்டும் கொழும்பு வெள்ளவத்தையில் கண்டெடுக்கப்பட்டு, 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரங்காட்டி "நமது ஈழநாடு பணிமனை" இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

# "காசி ஆனந்தன் நறுக்குகள் நூல்" சென்னையில் வெளியீட்டு விழா!

கவிஞர் காசி ஆனந்தனின் "காசி ஆனந்தன் நறுக்குகள் நூல்" சென்னையில் கடந்த 26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது.

சொற்சித்தர் வலம்புரிஜான் தலைமையில், சென்னை தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையரங்கில் இந்த விழா சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் - மூத்த இலக்கியவாதி வல்லிக்கண்ணன், கலைப்புலி தாணு, மதுரா பாலன், சேது குமணன், உட்படப் பல பிரமுகர்கள் பங்கேற்றனர்.




**லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற முதலாம் வருட மாணவர்கள் வரவேற்பு ஒன்று கூடல் நிகழ்வில்- மாணவத் தலைவர் ஜெ.ஜெயலன் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பதிவாளர் ஜி.இராஜேந்திரம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (78)**

வாழ்க வளமுடன்

1 2 HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : பி.லக்ஷிகா
முகவரி: 66/2, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
------------------------
பெற்றார் ஒப்பம்




# கணினிக் கல்வியில் திறமையான சான்றிதழ்களைப் பெறுவது எப்படி?

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

முதலாவதாக நாம் இணையத்தினூடாக நடைபெறும் பரீட்சைகளைப் பார்க்கையில்,

❖ இன்று மிகப் பிரபல்யம் வாய்ந்த **JAVA** மொழியினை உருவாக்கிய, **Sun Micro Systems** நிறுவனத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளான,

1. **SCJP (Sun Certified Java Programmer).**
2. **SCJD (Sun Certified Java Developer).**
3. **SCJA(Sun Certified Java Architect).** என்பவற்றினையும்

❖ மென்பொருள் துறையில் முன்னணி வகிக்கும் **Micro Soft** நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகளான.

1. **MCSE (Micro Soft Certified Systems Engincer)**
2. **MCSD ( Micro Soft Certified Solution Developer**
3. **MCDBA ( Micro Soft Certified Data Base Administrator)**

என்பவற்றினையும்,

❖ **Data Base** இல் பிரசித்தமாகும் **Oracle** நிறுவனத்தால் நடத்தப்படும்,

1. **OCP (Oracle Certified Professional)** என்பவற்றினையும் குறிப்பிடலாம்.

இப்பரீட்சைகளை எழுதுவதற்கான தகைமைகளை நோக்குகையில், இப்பரீட்சையை எவர் வேண்டுமானாலும் எழுதலாம். இங்கு அடிப்படைக் கல்வித்தகைமைகளோ, வயது வேறுபாடோ கிடையாது. நீங்கள் இப்பரீட்சைக்கு புத்தகங்களைப் படிப்பதன்மூலமோ அல்லது இணையத்திலிருந்து பதிவிறக்கம் **(Down Load)** செய்தோ படிக்கலாம்.

இணையத்தினூடாக நடைபெறும் பரீட்சைகளில் பல்தேர்வு வினாக்களே **(MCQ)** இடம்பெறுகின்றன. பொதுவாக இப்பரீட்சைகள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இப்பரீட்சையினை நாம் எங்கிருந்தும் இணையத்தினூடாக எடுக்கமுடியாது. மாறாக- இப்பரீட்சையினை நடத்துவதற்கு அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனங்களிடம் தொடர்புகொண்டே **On Line** இல் பரீட்சை எழுதவேண்டும். இலங்கையில் **IDM** போன்ற கல்வி நிறுவனங்கள் இந்த அங்கீகாரத்தைப் பெற்றுள்ளமைக்கு உதாரணமாகும்.

1996 ஆம் ஆண்டிலிருந்து இப்பரீட்சைகள் இணைத்தினூடாக நடைபெற்றபோதும், எமது நாட்டில் 2000 ஆண்டிலிருந்தே பிரபல்யமாகத் தொடங்கின. இந்த வகையில் **Sun Micro Systems** பரீட்சைகளை நோக்குவோம்.

### ❖ Sun Certified Java Programmer (SCJP)

இப்பரீட்சை **Java** மொழிபற்றிய அடிப்படைகளை நன்கு சோதனை செய்யும் விதமாக நடைபெறுகின்றது. இந்த வினாத்தாள் சுமார் 55 தொடக்கம் 60 வினாக்களைத் கொண்டிருப்பதோடு, இவை 90 நிமிடத்தில் பூரணப்படுத்தப் படவேண்டியதாக அமைந்திருக்கும். அத்துடன், வினாக்கள் யாவும் பல்தேர்வு **(MCQ)** வினாக்கள், சுருக்கமான விடை கொண்ட வினாக்கள் சரி (✓) அல்லது பிழை **(x)** இவற்றை விடைகளாகக் கொண்ட வினாக்களாகக் காணப்படும். இந்த வினாத்தாளில் 60% இற்கு மேல் புள்ளிகள் பெற்றாலே சித்தியடைந்ததாகக் கருதப்படும். இப்பரீட்சைக் கட்டணமாக 150 அமெரிக்க டொலர் அறவிடப்படுகின்றது.

### ❖ Sun Certified Java Developer (SCJD)

இப்பரீட்சையானது பல்தேர்வு வினாக்களாகக் காணப்படாது. மாறாக, தீர்வுகளிற்குரிய **Java Programme** வரிகளை **(Source Code)** எழுதவேண்டியிருக்கும். நீங்கள் எழுதும் **Programme** வரிகள் எப்படித் திறமையாக எழுதப்படுகின்றன எனப் பரீட்சிக்கப்படும். **Java** மொழிக்குரிய சிறப்புக்களிற்குரிய கட்டளைகளை எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றன என்றும் சோதிக்கப்படும். இப்பரீட்சைக்குரிய கட்டணமாக 250 அமெரிக்க டொலர் அறவிடப்படுகின்றது.

### ❖ Sun Certified Java Architech (SCJA)

இப்பரீட்சையானது **java** மொழிக்குரிய தொழில்நுட்ப அறிவையும் **Design** அறிவையும் மையமாகக் கொண்டுள்ளது.

### ❖ A+ Certification

வன்பொருள் **(Hard Ware)** ஐ மையமாகக் கொண்டு நடைபெறும் **On Line** பரீட்சையே $A^+$ ஆகும். இப்பரீட்சை இரண்டு நிலைகளில் நடாத்தப்படுகிறது.

1. **Core Hard Ware Exam.**
2. **Operating System Technologies Exam.**

**CHE (Core Hard Ware Exam)** என்பது கணினி வன்பொருள் சார்ந்த கேள்விகள் கேட்கப்படுகின்றன. அதாவது, கணினியில் உள்ள வன்பொருட்களைக் கட்டுப்படுத்தும் **OS (Operating System)** களை நுணுக்கமாகக் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

$A^+$ என்ற **(Acomptia Certification Program)** பரீட்சையினை **Comptia (Computing Technology Industry Association)** என்ற அமைப்பின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றது. வன்பொருள் சார்ந்த **On Line** பரீட்சையில் இன்றுவரை முதலிடத்தில் காணப்படுவது இதுவாகும். இப்பரீட்சைக்குரிய கட்டணமாக 70 அமெரிக்க டொலர் அறவிடப்படுகின்றது.

மாணவர்களே! இது பற்றிய மேலதிக விபரங்களை அறிய மேலும் ஆவலாக உள்ளீர்களா? அப்படியானால் பின்வரும் இணைய முகவரிகளை நாடுங்கள்.

**http : //java. sun. com**
**http : //suned. sun. com**
**http : //www . experguest. com**
**http : //www . infotec. com**




மேலும் இன்றைய கணினி யுகத்தில் இணையம் என்பது முக்கியமான ஒன்றாகும். எனவே, அடுத்ததாக இணையத்தை மையமாகக் கொண்டு நடைபெறும் **On Line** பரீட்சையான **CIW (Certified Internet Web Master)** பற்றிப் பார்ப்போம்.

### ❖ Certified Internet Web Master (CIW)

இந்த **On Line** பரீட்சையில் இணையத்தின் செயற்பாடு, கட்டமைப்பு, வடிவமைப்பு, மொழிகள் பதிவுசெய்தலை **(Servers)** எவ்வாறு கையாள்வது, வலைப்பின்னல் **(Net Work)** சார்ந்த அமைப்பு, இணைய சேவர்களின் தொழிற்படும் தகவற்தளம் **(Data Base)** இணையத்தில் பாதுகாப்பு போன்ற பல விடயங்களை மையமாகவைத்து கேள்விகள் கேட்கப்படுகின்றன.

இப்பரீட்சைகள் ஆறு நிலையங்களில் நடைபெறுகின்றன.

1. **CIW Associate.**
2. **CIW professional.**
3. **Master CIW web site manager.**
4. **Master CIW designer.**
5. **Master CIW Administrator.**
6. **Master CIW Enterprise Developer.**

இவற்றில் **CIW Associate** தகைமையைப் பெற்றால்தான் மற்றைய நிலைகளில் உள்ள பரீட்சைகளை எழுத முடியும். எனவே, **CIW Foundation** என்ற பரீட்சையை எழுதி சித்தியடைந்தால், **CIW Associate Certification** என்ற தகைமை பெறமுடியும். பின்னர் இரண்டு மட்டங்களில் பரீட்சைகளை எழுத முடியும்.

1. **CIW Professional**
2. **CIW Master**

**CIW Professional** என்ற தகைமையைப் பெறவேண்டுமாயின், முதலாவதாக **CIW Foundation** என்ற பரீட்சையை எழுதி சித்தியடைந்திருக்கவேண்டும். மேலும், **Site Designer E-Commerce Designer, Application Developer,Web Languages, Data Base Specialist** போன்ற பலதரப்பட்ட பரீட்சைகளில் ஏதாவது ஒன்றில் சித்தியடையவேண்டும்.

இதேபோன்ற **CIW Master** என்ற தகைமையை நான்கு நிலைகளில் பெறமுடியும். அவையாவன-

1. **Master CIW Web Site Manager.**
2. **Master CIW Designer.**
3. **Master CIW Administrator.**
4. **Master CIW Enterprise Developer**

இவற்றில் நாம் **Master, CIW Web Site Manager** தகைமையைப் பெற **Foundation, Site Designer** போன்ற பரீட்சைகளிலும், **Master CIW Designer** தகைமையைப் பெற மேற்கூறப்பட்டவற்றோடு **E-Commerce Designer** எனற பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இதேபோல் **Master CIW Administrator** என்ற தகைமையைப்பெற **Foundations, Ferver Administrator, internet working Professional Security Professional** போன்ற பரீட்சைகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**Master CIW Enterprice Developer** என்ற தகைமையைப் பெறப் பின்வரும் பாடத்திட்டத்தில் சித்தியெய்தல் வேண்டும்.

1. **Foundation.**
2. **Web Languages.**
3. **Application Developer.**
4. **Java Programming .**
5. **Object Oriented Analysis and Design.**
6. **Data Base Specialist.**
7. **Enterprise Specialist**

என்பனவாகும். இப்பரீட்சை அனைத்திலும் 60 பல்தேர்வு வினாக்கள் 90 நிமிடத்தில் செய்துமுடிக்க வேண்டும். இவற்றில் குறைந்தது 45 விடைகளாவது சரியாக இருந்தால் மட்டுமே சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். இப்பரீட்சைக்குரிய கட்டணமாக 70 அமெரிக்க டொலர் அறவிடப்படுகிறது. இதுபற்றிய மேலதிக விபரங்களைப் பெறப் பின்வரும் இணைய முகவரியைத் தெரிவுசெய்யவும்.

**www. ci2go. com**
**www.ciwcertified.com**
**www.examnotes.net**
**www.cert 21.com**
**www.9 cocities.com**
**www.circiram.com**

மேலும், நாம் **Computer Networking** பற்றிப் பார்க்கையில், கணினி வளர்ச்சிப் பாதையில் ஒரு பெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது **Computer Network** கண்டுபிடிப்பாகும். **Computer Network** என்பது, ஒன்றிற்கு மேற்பட்ட கணினிகளை இணைத்து அவற்றிற்கிடையே தகவல் பரிவர்த்தனையை மேற்கொள்வதாகும். இன்று ஒவ்வொரு சிறிய கம்பனியும் தமக்கென ஒரு தனிப்பட்ட கணினி வலைப்பின்னல் ஒன்றினை வைத்திருக்கும் அளவிற்கு இந்தக் கணினி வலைப்பின்னல் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது.

கணினி வலைப்பின்னலின் **(Computer Network)** பாரிய வளர்ச்சியானது கணினி சந்தையில் ஏராளமான புதிய கணினி வலைப்பின்னல் தொடர்பான கம்பனிகள் தோன்ற களம் அமைத்துக் கொடுத்துள்ளது. ஒவ்வொரு புதிய கம்பனியும் புதிய புதிய வலைப்பின்னல் தொழிநுட்பங்களுடனும் புதிய வலைப்பின்னல்கள் உலகை ஆக்கிரமித்துள்ளன. இக்கம்பனிகள் மேலும் புதிய வலைப்பின்னல் தொழிநுட்பங்களை கண்டுபிடிப்பதற்காகப் பாரியளவு பணத்தையும், நேரத்தையும், சக்தியையும் இன்று முதலிட்ட வண்ணம் உள்ளன.

இக்கம்பனிகள் இந்த ஆக்ரோசமான தொழில்நுட்பத் தேடலிற்கு முகங்கொடுக்க முடியாது. இன்றைய கணினி வலைப்பின்னலில் உலகம் தடுமாறிக் கொண்டிருக்கிறது. ஏனெனில், இக்கம்பனிகள் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு தொழில்நுட்பத்தையும் அவற்றின் வேகத்திற்கு ஈடுகொடுத்துக் கற்றறிவதற்குப் போதிய நேரமும், பணமும், சக்தியும் போதாமையே இதற்குக் காரணமாகும். *(தொடரும்)*

**சேனாதிராசா ஜெயானந்தன்**
**இடைவரவு விரிவுரையாளர்** (computer)
**யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

# தொழில் வங்கி



| நிறுவனம் | இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் | UNICEF (யுனிசெப்) | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு |
|---|---|---|---|
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | பதவி - 1<br>பொறியியலாளர் - தரம் III (நிறைவேற்று)<br>பதவி - 2<br>உதவி தொழில்நுட்பப் பயிலுநர் (ஒப்பந்த அடிப்படை) | உதவி தொடர்பு அலுவலர் (கொழும்பு) | இலங்கை வெளிநாட்டுத் தூதரகங்களில் ஆங்கில சுருக்கெழுத்தாளர்கள் |
| அடிப்படைத் தகுதி | 1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றில் மின்னியல்/ இலத்திரனியல் துறையில் விஞ்ஞானமாணி (பொறியியலாளர்) பட்டம்<br>2. இலத்திரனியில்/ தொலைத் தொடர்பு பொறியியல் துறையில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) பெற்றிருத்தல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பட்டம் பெற்ற டிப்ளோமா சான்றிதழ். | பின்வருவனவற்றில் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.<br>❖ ஆங்கில தட்டெழுத்து.<br>❖ ஆங்கில சுருக்கெழுத்து<br>❖ கணினி அறிவு |
| விண்ணப்ப முடிவு திகதி | 06.08.2003 | 11.08.2003 | 25.08.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

# வேளாண்மையில் தரமான விதைகள்; உற்பத்தி, இலாபத்தில் கூடிய பங்கு



ஒரு குறிப்பிட்ட பரப்பளவைக் கொண்ட காணித்துண்டில் பெறப்படும் ஆகக்கூடிய உற்பத்திக்குச் சிறந்த விதைகள், முக்கிய காரணிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அப்படியான விதைகள் பிறவிதைகளின் கலப்பின்றியும், அதாவது களைகளின் விதைகளோ அல்லது வேறு தாவரங்களின் விதைகளோ இன்றி, முளைதிறன் கூடியதாகவும் இருத்தல்வேண்டும்.

இவ்வகையான விதைகளினால்தான் சிறந்த, தரமான பயிர் உற்பத்தி செய்வதற்கு உத்தரவாதம் அளிப்பதோடு நோய்த்தாக்கம், பூச்சித்தாக்கம், களைகளுடன் போட்டியிட்டு வளரும் தன்மை, காலச் சீர்கேடுகளுக்கும் தாக்குபிடிக்கும் தன்மை போன்ற பல நன்மைகளை உருவாக்கமுடிகின்றது.

இந்த உண்மை நீண்டகாலமாக அறியப்பட்டிருந்தபோதிலும், கடந்த நூற்றாண்டில்தான் விதைகளின் உயிர்ப்புத் தன்மை (Seed Viability) பராமரிக்கப்படுவதற்கு ஒழுங்கான, நிலையான களஞ்சியப்படுத்தும் முறை ஆரம்பமானது. வழமையான, ஒழுங்கான பரிசோதனைகளும், பகுப்பாய்வுகளும் விதைகளின்மீது மேற்கொள்ளப்பட்டு, நடுகையின் பெறுமானமும் உயர்த்தப்பட்டதும் இந்த நூற்றாண்டிலேதான்.

இதையடுத்து விதைகள் பற்றிய கூடிய கரிசனையும், கூடிய அறிவும் தனியார்துறையிலும், அரசதுறையிலும் பல ஆய்வுகூடங்கள் ஏற்படக் காரணமானதுடன், விதைகள் மீது கொள்ளப்படும் பரிசோதனைகளுக்குத் தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் பல சட்டமுறைகள் உருவாகக் காரணமாயின.

மேம்படுத்தப்பட்ட பரிசோதனைகளினால் விதைகளின் அதியுயர் முளைத்திறனைப் (Germination Ability) பேணுவதற்காக, விதைகளை உரியமுறையில் களஞ்சியப்படுத்தும் (Proper Storage) தேவை ஏற்பட்டது. இது வருங்கால போகங்களுக்கு (Future Seasons) விநியோகிக்கக் கூடிய வகையில், சிறந்த விதைகளை மேலதிகமாக வைத்திருக்க வேண்டியது, விதை உற்பத்தியாளருக்கு மிக முக்கியமான தொன்றாகும்.

சில சந்தர்ப்பங்களில் உரிய தரம் பேணப்படுவதற்கான தகுந்த களஞ்சிய வசதிகள் இல்லாமல், இவை விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன. இதன் விளைவால் தரம் குறைந்த, முளைதிறனற்ற விதைகளையே ஒவ்வொருவரும் வாங்க நேரிடுகின்றது. களஞ்சியப்படுத்தல் சம்பந்தமான மேலதிக தகவல் கிடைப்பதால், புகழ்வாய்ந்த விதை உற்பத்தியாளர்கள், காற்றில் ஈரலிப்பு (Relative Humidity) குறைந்த அல்லது குளிர்மையான (Cold) களஞ்சிய அறைகளை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகக்குறைந்த இரண்டு வருடங்களுக்காவது, விதைகளை வைத்திருக்கக் கூடிய சந்தர்ப்பத்தில், விதை உற்பத்திக்கான நிலத்தின் அளவு குறைக்கச் செய்கிறது. அத்துடன், மாற்றுப் பயிர்ச்செய்கைக்கும் உதவுகிறது. நீண்ட காலம் விதைகளைச் சேமித்து வைத்திருக்கக்கூடிய தன்மையின் பெறுபேறானது, விதைகளின் இனத்தைப் பற்றிய கரிசனையோடு இருப்பவர்களுக்கும், புதிய விதை இனங்களை அறிமுகம் செய்வோருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமைகிறது. இத்தன்மையானது பெறுமதிமிக்க விதைகள் வழங்கப்படுவதற்கு, பலமுறை பயிர்த் தாவரங்களை உண்டுபண்ணி, விதைகளை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவேண்டிய ஒரு தேவையை இல்லாமல் செய்கிறது.

குறிப்பிட்ட ஒரு தொகை விதையின் சிறந்த களஞ்சியப் படுத்தும் தன்மை தீர்மானிக்கப்பட்டபோதிலும், இவை சம்பந்தமாக மேலும் பல பிரச்சினைகள் எழவே செய்கின்றன. விவசாயிகள் விதைகளை வாங்கி நடுமுன்னர் - இவை வெப்பம் குறைந்த களஞ்சிய அறையிலிருந்து பாவனைக்குக் கூடிய காலத்திற்கு முன்னரே அகற்றப்படுகிறமையினால், இந்த விதைகள் நடுகையின்போது தப்பிப்பிழைக்குமா? என்ற கேள்வி எழுகின்றது.

மேலும், பொதி செய்யப்பட்ட விதைகள் சிறு வியாபாரிகளினால் பாதகமான சூழலில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுகின்றன. எனினும், இவ்விடயம் சம்பந்தமான ஆய்வுகளின் முடிவுகளின்படி, பொதிகள் ஈரம் உட்செல்லாத சிறந்த முறையில் இருப்பது முக்கியமென்பதை எடுத்துக்கூறி, விளக்கி நிற்கின்றன.

ஒரு குறிப்பிட்ட விதையின் சிறந்த களஞ்சியப்படுத்தும் தன்மை - ஒவ்வா நிலைகளுக்குத் (Stress Condition) தாக்குப்பிடிக்கும் தன்மையைக் கூடியளவிற்குக் கொடுக்கின்றது.

பழைய விதைகளிலிருந்து பெறப்படும் (எதிர்பார்க்கப் படும்) தாவரங்களின் தரமானது, ஒரு முக்கிய அம்சமாகும். அதிகரித்துவரும் ஆராய்ச்சிமூலம் நாம் அறியக்கூடியது யாதெனில், எந்த விதைகளினுடைய செயற்பாடுகளும், அதன் வயதில் குறைவாகத் தங்கியிருப்பதுடன், அவை பெரும்பாலும் களஞ்சியப்படுத்தப்பட்ட தன்மையிலேயே அதிகம் தங்கியிருக்கின்றது.

உலக மக்கள் உணவிற்காகப் பெரும்பாலும் தாவரங்களிலே தங்கியிருப்பதும், தாவரங்கள் விதைகளுக்காகவே நடுகை செய்யப்படுகின்றன என்ற உண்மை உணரப்பட்டதாலும், தரம்வாய்ந்த விதைகள் உற்பத்தி செய்யப்படுவதும், விதைகளின் விநியோகத்தைப் பேணிப் பாதுகாப்பதும் விதைகளின் முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

(தொடரும்)

கலாநிதி வை.அருள்நந்தி
மாணவர் பகுதி, விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

# பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் யாழ்ப்பாண விவசாயிகள்



யாழ். விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளில் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். வானம் பார்த்த பூமியில் தமது கடினமான உழைப்பின் மூலமாக, பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள், யுத்தகால நெருக்கடிகளில் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்கியிருந்தனர்.

உள்ளீடுகளின் விலை இரட்டிப்பாக உயர்ந்தமை, உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்புப் பெருமளவில் கிடைக்காமை முதலிய பிரச்சினைகள் யுத்தகாலத்தில் நிலவியிருந்தன.

'ஏர்ப்பின்னது உலகம்' என்று வள்ளுவர் காலத்தில் விவசாயிகள் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். இந்த நிலைமை தற்போது அருகிவருவதை அவதானிக்க முடிகின்றது. விவசாயிகளின் மதிப்பு இவ்வாறு குறைவடைவதற்கு, வருமான ஒழுங்கின்மையைக் காரணமாக்கிக் கொள்ள முடிகின்றது. சந்தை நிலைமைகளை உற்று நோக்குபவர்களுக்கு இந்த உண்மை தெட்டத்தெளிவாகப் புலனாகும்.

பொதுவாக, விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வகைப்படுத்தும்போது அவை பின்வருமாறு அமைவதனைக் காணலாம்.

சந்தை வாய்ப்புடன் கூடிய விவசாய உற்பத்தி முறையும், விஞ்ஞான பூர்வமான பயிர்ச்செய்கை முறையும் உருவாக்கப்படாமை முக்கிய பிரச்சினையாக அமைகின்றது.

இந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு விவசாயிகளினதும், கல்வியாளர்களதும் ஒருங்கிணைந்த செயற்பாடு அவசியமாகும்.

விவசாயிகளுக்கும் விவசாயக் கல்விக்கும் இடையேயுள்ள இத்தகைய இடைவெளிகளை, எமது விவசாயம் பின்னடைவதற்கான ஒரு காரணமாகக் குறிப்பிடலாம். இந்த இடைவெளிகளை அகற்றுவதற்கு, விவசாயத் தலைமையக அமைபபுக்கள் ஆலோசனை வழங்க முன்வரவேண்டும்.

விவசாயிகளினது பயிர்த்தேர்வு முறைமை ஒழுங்குபடுத்தப்படாமல் இருப்பது, இன்னோர் குறைபாடாக அமைகின்றது.

இதுவரை காலமும் சந்தையில் நிலவும் உச்சவிலையைக் கருத்திற்கொண்டே விவசாயிகள் தமது பயிர்த்தேர்வு முறையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால், எல்லோரும் ஒரேவிதமான பயிரைச் செய்கை பண்ணி நட்டமடையும் நிலை தோன்றுகின்றது. வருமானச் சீரின்மைக்கு இது வழிவகுக்கின்றது.

எனவே, விவசாயப் பகுதியினர் தமது கண்காணிப்பின் கீழ-காலநிலை, மண்ணின் தன்மை, சந்தை வாய்ப்பு இவைகளுக்கேற்ப திட்டமிட்ட பயிர்த்தேர்வு முறையை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தவேண்டும்.

பயிர் நோய்த்தடுப்பு, முற்காப்பு நடவடிக்கைகளில் போதிய அளவில் விவாசாயிகளுக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை என்பது, கருத்துள்ள பிரச்சினையாக அமைகின்றது.

பயிரில் நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளை இனங்கண்டு தடுக்கும் முறைகளை இந்தியாவில் செய்வதைப்போல், இங்கும் அறிமுகப்படுத்தப்படவேண்டும். இதன்மூலம் மரக்கறி வகைகள் நஞ்சூட்டப்படுவதிலிருந்து தடுக்கமுடியும்.



இவற்றை மீறி நோய்கள் ஏற்படும்போது, விவசாய உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின்கீழ் குறித்த நோய்க்கு மருந்து என, உறுதியாக சிபார்சுசெய்யும் நிலை தோன்ற வேண்டும்.

இப்போது கிருமிநாசினி விற்பனையாளர்களிடமிருந்தே, பெருமளவிலான விவசாயிகள் ஆலோசனை பெறும் நிலை இருந்துவருகின்றது. இந்நிலை விரைவில் மாறவேண்டும்.

விவசாய உத்தியோகத்தர், விவசாய மாணவர்கள், விரிவுரையாளர்கள் - விவசாயிகளை அவர்களது விளை பருவத்திலேயே சந்திக்க முன்வரவேண்டும். தொடர்பு விவசாயி என்று ஒரு சிலரிடம் மட்டும் நின்றுவிடாமல், விவசாய அமைப்புக்கள் ஊடாக அனைத்துக் கிராம விவசாயிகளையும் சந்திக்கக்கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும்.

செயற்கைப் பசளையின் அதிகரித்த பாவனையும், நிலத்தடி நீர் மாசடைதலும் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையாகவுள்ளது.

இத்தகைய ஓர் நிலையை நிவர்த்திசெய்வதற்கு, இயற்கைப் பசளையின் முக்கியத்துவத்தையும், அதனைத் தயாரிக்கும் முறைகளையும் விவசாயத் திணைக்களம் அறிவுறுத்தி வருகின்றது. எனினும் நடைமுறைச் சாத்தியமற்ற ஒன்றாக இது விளங்கிவருகின்றது.

எனவே, இயற்கைப் பசளைகளைத் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கும் முறைகளை விரிவாக்குவது அவசியமானதொன்றாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் விவசாய உள்ளீடுகள் அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடையத் தவறுகின்றன. இதனால் ஒற்றுமையீனமும், விவசாய அமைப்புக்கள் மீது நம்பிக்கையீனமும் விவசாயிகளிடையே ஏற்படுகின்றது.

இப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அனைத்து விவசாயிகளுக்கும் சென்றடையக்கூடிய வகையில் விவசாய உள்ளீடுகளை வழங்கவேண்டும். ஒருசில உள்ளீடுகளை வழங்குதல் முதலான சிறிய சிறிய உதவிகளை வழங்குவதைவிட, சந்தை வாய்ப்பு அற்றுப்போகும். விவசாய மிகை உற்பத்திப் பொருட்களைப் பதனிட்டுப் பாதுகாக்கும் குளிர்சாதன நிலையங்களை ஏற்படுத்தித் தருவது, விவசாயிகளுக்குப் பயன்தரும் ஒரு நடவடிக்கையாக அமையும்.

இன்று வளர்ந்துவரும் நவீன விவசாய உற்பத்தி முறைகளைப் புரிந்துகொள்ளவும், நடைமுறைப்படுத்தவும் விவசாயிகளுக்குக் கருத்தரங்குகளும், செயல்முறை விளக்கங்களும் ஏற்படுத்திக்கொடுத்து, விவசாயத் திணைக்களம் தமது பணிகளை விரிவாக்கம் செய்தல்வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலமாக விவசாயிகளிடையே காணப்படும் பிரச்சினைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவிலான தீர்வுகளையாவது கண்டுகொள்ளமுடியும், என எதிர்பார்க்கலாம்.

கணபதிப்பிள்ளை நிசாகரன்

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சங்கானை | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 60/= | 50/= | 50/= | 60/= | 60/= | 50/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 65/= | 70/= | 80/= | 65/= | 80/= | 70/= |
| கத்தரிக்காய் | 20/= | 20/= | 60/= | 60/= | 25/= | 20/= | 60/= |
| பாகற்காய் | 50/= | 40/= | 50/= | 40/= | 60/= | 40/= | 40/= |
| வெண்டிக்காய் | 40/= | 50/= | 30/= | 30/= | 90/= | 40/= | 15/= |
| கரட் | 60/= | 50/= | 40/= | 60/= | 60/= | 50/= | 30/= |
| பீற்றூட் | 25/= | 15/= | 30/= | 40/= | 35/= | 15/= | 20/= |
| முருங்கைக்காய் | 70/= | 60/= | 60/= | 60/= | 100/= | 50/= | 80/= |
| வெங்காயம் | 40/= | 50/= | 25/= | 30/= | 50/= | 60/= | 20/= |
| பச்சை மிளகாய் | 15/= | 10/= | 40/= | 60/= | 40/= | 15/= | 40/= |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*ஐந்தில் வளையாதது*
*ஐம்பதில் வளையுமா?*

- தமிழ்ப்பழமொழி

# நமது நோக்கு

## யார் காரணம்?

பாடசாலை மாணவர்கள் மத்தியில் - சமீபகாலமாக எவருக்கும் கட்டுப்படாதபோக்கும், வன்முறை மனோபாவமும் அதிகரித்துவருகின்றது. சமூகத்தில் இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இனங்காணப்பட்டிருக்கிறது.

நாடு முழுவதிலும் - மாணவர்களின் இத்தகைய போக்குப் பெரியளவிலான வித்தியாசமின்றி இருப் பதை அவதானிக்கமுடிகிறது.

இந்த நிலை நீடிப்பதற்கு என்ன காரணம் என்று கண்டறிவதற்கான முழுமையான முயற்சிகள் எடுக்கப்படவோ, ஆய்வுகள் மேற்கொள்ளப்படவோ இல்லை என்பது வேதனையான விடயம்.

எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக உருவாக வேண்டிய இன்றைய இளம் தலைமுறையினரை- 'சகதிக்குள் சிக்கிக்கொண்டுள்ள' நிலையிலிருந்து மீட்பதற்கு முன்னர்- ஏன் இவ்வாறான சகதிக்குள் மாணவர் சமுதாயம் சிக்கிக்கொள்கின்றது என்பது பற்றி, தர்க்கபூர்வமாக ஆராயப்படவேண்டும்.

மாணவர்கள் மத்தியில் அடாவடித்தனமான - கட்டுப்படாத மனோபாவமும், இதன் விளைவாகத் தோன்றக்கூடிய சமூகச் சீரழிவுச் செயற்பாடுகளும் எதிர்கால சந்ததியின் அழிவுக்கே இட்டுச்செல்லும்.

இதனால்தான், இத்தகைய அபாயநிலையிலிருந்து இளைய சமுதாயத்தை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இந்தநிலையில்தான், ஒரு கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது, தடைபோடப்படுவதுதான்- வளர்ந்த பின்னர் மாணவர்களின் அடாவடித்தனங்களுக்குக் காரணமாக அமைவதாக - கல்வித்துறைசார் அதிகாரிகளால் கருத்து முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்து முக்கியமாகக் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகவே இருக்கின்றது. காரணம் என்னவென்றால், பெற்றோர்களே - தமது பிள்ளைகளின் எதிர்காலக் குணவியல்புகளுக்குக் காரணமாக அமைகின்றார்கள் என்பதையே இந்தக் கருத்து வலியுறுத்துகின்றது.

ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்கள் - தமது பெரும்பாலான நேரத்தை வீட்டிலேயே - தாய், தந்தை, சகோதரர்களுடனும், உறவினர்களுடனும் கழிக்கின்றனர்.

இந்த ஐந்து வயதுக்குட்பட்ட காலப்பகுதிக்குள் தான், சிறுவர்களின் நுண்ணறிவு வளர்ச்சியடைகிறது. இந்தக் காலகட்டத்தில் பெற்றோர்கள் - சிறுவர்கள் மீது விதிக்கும் தடைகள், கட்டுப்பாடுகள்- சிறுவர்களின் நுண்ணறிவு வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும், இதுவே பிற்காலத்தில் அவர்களின அடாவடித்தனச் செயற்பாடுகளுக்குக் காரணமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சிறுவயதில் பெற்றோர்களின் இத்தகைய கட்டுப்பாடுகள், தடைகள் சுயசிந்தனை ஆற்றலை மட்டுப்படுத்திவிடும் அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதுவே, மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமன்றி, எதிர்கால வாழ்விலும் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்திவிடும்.

இதனால் பெற்றோர்கள் அந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தவேண்டியது, அவசியமாகின்றது. அதேநேரம், ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களுக்கான கல்வித்திட்டமும், தற்காலத்தில் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் இருந்த நிலையிலும் பார்க்க, இப்போது சிறார்கள் சுயமாகச் செயற்பட்டுக் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காகச் சிறுவர் கல்விச் செயற்திட்டங்கள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டிருக்கின்றன.

இதன் ஒரு கட்டமாகவே சிறுவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள், விளையாட்டுச் செயற்பாடுகளினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் புதிய அணுகுமுறை மாணவர்கள் மத்தியில் நல்ல பெறுபேற்றைத் தருவதாகவும் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

இங்கே ஆசிரியர்களுக்கு மட்டும் இந்த விடயத்தில் பொறுப்பு இருப்பதாகக் கூறிக்கொள்ள முடியாது. சிறுபராயத்திலிருந்தே மாணவர்களின் விளையாட்டுச் செயற்பாடுகளுக்குத் தடைவிதித்து, கட்டுப்பாடுகளுக்குள் சிக்கவைத்து, இயந்திரமயமான சூழலுக்குள் கொண்டு செல்லும் நிலையிலிருந்து, விடுவிக்க சகல பெற்றோர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

சுதந்திரமாகச் சிந்தித்து, சுதந்திரமாகச் செயற்படத் துணியும் சிறுவர்களே சிறந்த ஆளுமைகொண்ட மனிதனாக உருவாகமுடியும். இந்த விடயத்தில் பெற்றோர்களின் பங்கும், பணியும், ஆசிரிய சமுதாயத்தின பங்கும், பணியும் பின்னிப்பிணைந்தனவாக உள்ளன.

இந்தப் பொறுபுக்களை இருவரும் செவ்வனே நிறைவேற்றுவதன் மூலம், எதிர்காலச் சந்ததியை சிறந்த ஆளுமை கொண்டவர்களாக உருவாக்கமுடியும்.

# வாக்காளர்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு தேர்தல் ஆணைக்குழு இயங்க வேண்டும்!

## பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு

இலங்கை சுயாதீன தேர்தல் ஆணைக்குழு வாக்காளர்களுக்கும், அரச ஊழியர்களுக்கும் அமைவாக இயங்க வேண்டுமென பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

வாக்காளரும், அரச ஊழியரும் சுயாதீனமாக இயங்கக்கூடிய வகையில் செயற்படவேண்டும் எனவும், அவர் தெரிவித்தார்.

வாக்காளர் சுதந்திரமாகவும், நீதியாகவும் தேர்தலை எதிர்நோக்க வேண்டும். அரச ஊழியர்கள் இதற்கு அமைவாகச் செயற்படவேண்டும்.

அரச ஊழியர்கள் விழிப்புடன் கருத்துக்களை வெளியிடவேண்டும்.

ஊடகங்கள் தேர்தல் காலங்களில் சரியானதொரு வழிகாட்டல்களை மேற்கொள்ளவேண்டும். அத்துடன், பொலிஸாருக்கும் சரியான அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்.

நியாயமான தேர்தல் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு, அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பும், ஒற்றுமையான செயற்பாடும் புரிந்துணர்வும் தேவையெனவும் பிரதமரின் செயலாளர் தெரிவித்தார்.

## எஸ்.பியின் வற்புறுத்தலையடுத்து விவசாய அமைச்சுக்கு 220 மில்லியன்!

(கொழும்பு)

விவசாய அமைச்சிற்கு மேலதிக நிதி ஒதுக்கீடாக 220 மில்லியன் ரூபா திறைசேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி உரமானியத்திற்காக வழங்கப்பட்டுள்ளது என்றும், ஒவ்வொரு மெட்றிக் தொன் உரத்திற்கும் அரசாங்கம் ஆயிரம் ரூபா மானியம் வழங்குகின்றது என்றும், விவசாய அமைச்சின் செயலாளர் ஜினசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களத்துக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என, அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க பதவி விலகியிருந்தார் என்பதும், இப்பிரச்சினையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாகத் தலையிட்டு பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தார், இந்த அடிப்படையிலேயே மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

திறைசேரியால் வழங்கப்படவுள்ள இந்நிதி உர உற்பத்தி கம்பனிகளுக்கு மானியச் சட்டத்துக்கு அமைவாக வழங்கப்படும்.

உர உற்பத்திக் கம்பெனிகளுக்கு ஒன்றரை மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. இவற்றுக்கான கொடுப்பனவுகள் திறைசேரி நிதியிலிருந்து வழங்கப்படவுள்ளது.

இதேவேளை - யூரியாவின் தற்போதைய விலை 1400 இலிருந்து 850 ரூபாவாக குறைந்துள்ளது என்றும், மேலும் இவ்விலைக் குறைப்பு இடம்பெறமாட்டாது என்றும் தெரிவித்த, விவசாய அமைச்சின் செயலாளர் சர்வதேச சந்தையில் உரங்களின் விலை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## தபால் திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்ப முடிவு

(கொழும்பு)

தபால் சேவைகளிலுள்ள அத்தியாவசிய பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தபால் திணைக்களத்தில் பணியாற்றும் ஊழியர்களும் தமது தகைமைகளுக்கு ஏற்றவாறு இப்பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்கமுடியும் எனவும் அறிவித்தல் வெளியாகியுள்ளது.

இதேவேளை, தபால் திணைக்களங்களில் பணியாற்றும் சிற்றூழியர்களுக்கான பணிகளைச் செய்துவரும் பதிவு செய்யப்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதுவரையில் நிரப்பப்படாமலுள்ள ஆயிரம் உபதபால் அதிபர்களுக்கான வெற்றிடங்களையும் நிரப்புவதற்குப் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது. இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த தபால் அலுவலகங்களை மீள உருவாக்கம் செய்வதற்கான பணிகளும், ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீள் உருவாக்கம் செய்யப்படவுள்ள தபால் அலுவலகங்களில் - வட - கிழக்குப் பகுதிகளில் மட்டும் 22 புதிய தபால் நிலையங்கள் உருவாக்கப்படவுள்ளன.

இப்புதிய தபால் நிலையங்களின் உருவாக்கத்திற்கென 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தொலைபேசி இலக்கங்களில் முதலாம் திகதிமுதல் மாற்றம்!

(கொழும்பு)

இலங்கைத் தொலைத்தொடர்பு சேவைகள் ஆணைக்குழு - தேசிய தொலைபேசி இலக்கங்களில், பத்து எண்கள் கொண்டதாக தொலைபேசி எண்களில் மாற்றங்கள் செய்யவுள்ளது.

அடுத்த மாதம் 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த நடவடிக்கைகளில் கொழும்பு பரிவர்த்தனை நிலையத்தில், ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் தொலைபேசி இலக்கங்கள் மாற்றியமைக்கப்படவுள்ளன.

3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய எண்களில் தொடங்கும் தொலைபேசி எண்களுக்கு முன்னால் 2 என்ற எண் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, அடுத்த மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் சிறிலங்கா ரெலிக்கொம் தொலைபேசி இலக்கங்களில் ஏழு எண்களைக் கொண்டதாக இருக்கும் எனத்தெரிய வருகின்றது.

கொழும்புக்கு - வெளியூரிலிருந்து அழைப்புஎடுக்கும் போது, 01 என்ற குறியீட்டு இலக்கத்தோடு ஒன்பது இலக்கங்களை கொண்ட தொலைபேசி எண்களை இனி பயன்படுதவேண்டும்.

திருகோணமலை, களுத்துறை ஆகிய பகுதிகளில் அடுத்த மாதம் 9 ஆம் 16 ஆம் திகதிகளில் இம்மாற்றங்களை சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

லங்காபெல், சன்ரெல் ஆகிய நிறுவனங்கள் - நவம்பர் மாதம் 8 ஆம் திகதிமுதல் பத்து எண் தேசிய இலக்கத்துள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### இடைக்கால நிர்வாகம் தொடர்பாக

## தமிழ்ச்செல்வனின் கூற்றை கதிர்காமர் வரவேற்றுள்ளார்

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாகத் திருத்தப்பட்ட புதிய தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கப் போவதாக புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கூறியுள்ளதை லக்ஷ்மன் கதிர்காமர் வரவேற்றுள்ளார்.

வடக்கு - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகத்தை வழங்குவதிலுள்ள இழுபறிகள் இதன்மூலம் அகற்றப்பட்டு, அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து, விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கும் திருத்தியமைக்கப்பட்ட புதிய திட்டத்தை ஆராய்ந்து, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வுகாண வழிபிறக்கும் எனவும், அவர் தெரிவித்தார்.

இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள இடைக்காலத் தீர்வுத் திட்டத்தைப் பரிசீலித்த பின்னர், விடுதலைப் புலிகள் தங்களது திருத்தங்கள் அடங்கிய தீர்வுத்திட்டத்தைக் கையளிப்பார்கள் என்று, கிழக்கில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளதை வரவேற்றுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் -

இத்திட்டம் கிடைக்கப்பெற்றால் ஐக்கிய தேசிய முன்னணியுடன், பொ.ஐ.முவும் இணைந்து ஓர் சமரசத் தீர்வுத்திட்டத்தை இறுதியாகத் தயாரிக்கமுடியும் என்பதால், இது மிகவும் வரவேற்கத்தக்க முன்னேற்றம் என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை - இத்தகைய ஓர் திட்டத்தை அரசு சமர்ப்பித்துள்ளதையும் அதற்குப் பதிலாக ஓர் திட்டத்தை விடுதலைப் புலிகள், மீளக்கையளிக்கும் விடயத்தையும் தாம் கடுமையாக எதிர்ப் பதாக ஜே.வி.பி., சிஹல உறுமய, ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் கருத்து வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## தொலைபேசிக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை!

### செப்ரெம்பர் முதல் நடைமுறைக்கு

இலங்கைத் தொலைத் தொடர்பு சேவைகள் - ஆணைக்குழு தொலைபேசிக் கட்டணங்களை அதிகரிப்பதற்குரிய அங்கீகாரங்களை வழங்கியுள்ளது.

அரசுக்கும், நிப்பொன் தொலைத் தொடர்புக் கம்பெனிக்கும் இடையிலான உடன்பாட்டை அடுத்தே இவ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தொலைபேசி கட்டணங்கள் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது என, தொலைத் தொடர்பு சீராக்கல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

புதிய கட்டண அதிகரிப்பின்படி செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியிலிருந்து அதிகரித்த கட்டண அறவீட்டினை மேற்கொள்ளப்போவதாக ரெலிக்கொம் நிறுவனம் அறிவித்துள்ளது.

புதிய இணைப்புக்கான கட்டணம் 15 ஆயிரத்து 300 இலிருந்து, 19 ஆயிரத்து 750 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

பாவிக்கும் அலகுகள் அதிகரிக்க அதிகரிக்க கட்டணங்கள் குறைவடையும் என்றும், ரெலிகொம் நிறுவன செய்திக் குறிப்புத் தெரிவிக்கின்றது.

201 அலகுகளிலிருந்து 1000 அலகுகள் வரை ஒரு யுனிற்றுக்கு 3 ரூபாவும், 1000 அலகிலிருந்து 3000 அலகுகளுக்கு ஒரு யுனிற்றுக்கு 2 ரூபா 75 சதமும், 3000 இற்கு மேற்பட்ட அலகுகளிற்கு 2 ரூபா 50 சதமாகவும் கட்டணங்கள் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளுக்கான மாதாந்த இணைப்புக் கட்டணம் இருநூற்று நாற்பது ரூபாவில் இருந்து ஐந்நூற்றி 94 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

வர்த்தக பாவனைகளுக்கான தொலைபேசிக் கட்டணம் ஐந்நூற்று நாற்பதிலிருந்து ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சமய நிறுவனங்களுக்கு மாதம் அறுபது ரூபா வீதம் கட்டணம் அறவிடப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



ச.பொட்டு

# விடுதலைப் போரின் வரலாற்றுடன் பயணித்த புதுவையின் கவிதைகள்!

**கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'வியாசனின் உலைக் களம்' நூலுக்குப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு வழங்கிய செய்தி இது.**

தமிழ் வாசகர்களுக்கு புதுவை அண்ணருக்கான அறிமுகம் தேவையில்லை. வீச்சும், மூச்சும் அவரது படைப்புகளுக்கு எமது விடுதலைப் போரில் தனியானதோர் இடமுண்டு.

சொல்லப்போனால் விடுதலைப் போரின் வரலாற்றுடன் சேர்ந்து, அவரது கவிதைகளும் பயணித்துள்ளன எனலாம்.

விடுதலைப் போராட்டம் - போரியலில் முனைப்புப்பெற்ற 1987 இற்கு முந்தியகாலத்தில், அவரது கவிதைகள் - ஒரு தேசம் என்ற கருத்தின் தோல்வியை உரைத்தன. எம் தேசியத்து எழுச்சியின் நம்பிக்கையைக் கூறின.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில், அவரது பாடல்கள் காடுகளின் கரந்துறை விடுதலை வாழ்வியலுடன் பயணித்தன.

யாழ்ப்பாணத்தில் பதுங்குகுழி வாழ்க்கைக்கும் அவரது கவிதைகள் பழக்கமாயின. விமானத்தின் குண்டுவீச்சுக்களும், பீரங்கிகளின் எறிகணை வீச்சுக்களும் அவரது கவிதைப் பொருளாயின. அவற்றின் படுகொலை வீச்சுக்கண்டு வெம்பி, வெடித்து, கோபங்கொண்டு சாபமிட்டன.

யாழ்ப்பாணத்தைவிட்டு விடுதலைப் போரியல் தலைமை இடம் பெயர்ந்தபோது - புதுவை அண்ணரின் கவிதைகளும் அழுதபடியே சேர்ந்து வந்தன. ஆனால், நம்பிக்கை தளராத வரிகளுடன் விடுதலைக்கனவு குலையாத பாடல்களாய்.

பொருட்தடை, மருந்துத்தடை, போக்குவரத்துத்தடையென எல்லாத் தடையினுள்ளும் கிடந்தழுந்திய எம் மக்களுடன் சேர்ந்திருந்தன புதுவை அண்ணரின் கவிதைகள். வன்னியினுள்ளே நடந்தேறிய விடுதலை வேள்வியில் சேர்ந்தொலித்தன அவரது பாடல்களும்.

இராணுவக் கொலை வலயத்தினுள் பயணிக்கும் இளம் வீரருடன் சேர்ந்து, புதுவை அண்ணரின் பாடல்களும் பயணித்தன. எம்மக்களுக்கு ஆறுதல் சொல்லின.... போரிட அழைத்தன .... போரிட்டன..... வெற்றிச் செய்திகளும் சொல்லின... விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் பற்றி மட்டுமல்லாது, தமிழீழக் கட்டமைப்பு, எமது தேசத்து நிலபுலன்கள, மக்களது கலாசார வாழ்வியல்கள், தமிழீழப்பெண்களது புரட்சிகர போரியல், சர்வதேச அரசுகளுடனான எம் இனவாழ்வு எனப் புதுவை அண்ணரது படைப்புகள் பன்முகப்படுத்தப்பட்ட, வாசிப்பு அனுபவத்தைத் தருபவை.

புதுவை அண்ணரது கவிதைகள், பாடல்கள் பற்றி எம்முள்ளே பேசப்படும் வேளைகளில் "காலத்தின் குரல்கள்" என்று கூறுவேன். எமது விடுதலைப் போர் கடந்து வந்த பாதையில - வீரமும், சோகமும், கோபமும், மகிழ்ச்சியும், பெருமிதமும் என மாறி மாறிய உணர்வுகளைக்கொண்ட காலங்களைக் கடந்துள்ளோம். அந்தக் கால உணர்வுகளின் குரலாகப் புதுவை அண்ணரின் படைப்புகள் பதிவு பெற்றுள்ளன என்பது எனது கருத்து.




புதுவை அண்ணருக்கு வாய்த்துள்ள அற்புதமான கவியாற்றலும், அனாசயமான சொல்வளமும் அவரைப் பெரும் கவிஞர்களது வரிசையில் சேர்த்துள்ளது. இவற்றுடன் அவர் தன்னை இணைத்துக்கொண்ட இலட்சிய வாழ்வும் அவரது படைப்புகளில் சேர்ந்துள்ளது. இவையே அவரை "காலத்தின் குரலாக பேசும்" கவிஞராக்கியது எனலாம்.

இங்கு நூலுருப்பெறும் 'உலைக்களம்' - அவ்வரிகளில் எழுந்த உணர்வுவரிகளின் தொகுப்பு. அந்தந்த காலத்தேய விடுதலைப்போரின் களநிலைகளைத் தழுவிய உணர்வின் குரல்கள்.

இந்த உலைக்களத்தின் சிறப்பு என நான் பார்ப்பது, இது வெறும் புதுவை இரத்தினதுரை என்ற தனி ஒருவரின் உணர்வின் குரலாக மட்டும் அமைந்துவிடாததுதான். மாறாக உலைக்களத்தை ஆழ்ந்து விரும்பி வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் பொருந்திப் போகும் உணர்வுகளின் வெளிப்பாடுகளை அவற்றில் காணலாம்.

போராளி நிலையிலோ, பொதுமகன் நிலையிலோ அல்லது படித்தவரின் நிலையிலோ, பாமரரின் நிலையிலோ எந்த நிலையில் நின்று பார்க்கும்போதும், அவரின் உணர்வின் வரிகளாக உலைக்களம் பொருந்திவரும்.

ஆக்கிரமிப்பாளர்கள், பயங்கரவாதம் என வர்ணிக்கும் விடுதலைப் போரியல் நடவடிக்கைகள் உலைக்களத்தில் பல இடங்களில் பேசப்பட்டுள்ளன. அந்த நடவடிக்கையின் பின்னேயுள்ள அர்ப்பணிப்புகளையும், எம் இனத்தின் உணர்வுகளையும், அரசியல் அர்த்தங்களையும் வாதிடும் கவிமொழிநடையில், பூடக சொல்லாடலில் பதிவாகியுள்ளார்.

போர்நிறுத்தங்கள், சமாதானப் பயணங்கள், பேச்சுவார்த்தைகளென, நிகழ்கால அரசியல் ஓட்டங்களையும், அதன் பின்னே விடுதலை வேண்டி நிற்கும் இனத்தின் உணர்வுகளையும், அரசியல் அர்த்தங்களுடன் உலைக்களத்தில் பதிவாக்கியுள்ளார்.

எமது தலைவர் - உலைக்களத்தை ஒவ்வொரு வரியாக ஏற்றி, இறக்கி, தணித்து வாசிக்கும் வேளையில், அருகிலிருந்து கேட்கும் வாய்ப்பைப் பெற்றிருக்கின்றேன். சிலவேளைகளில் எனக்கெனத் தனியாகக்கூட தலைவர் வாசித்துக் காட்டியுள்ளார். தலைவர் - சிறந்த வாசகர் என்பதற்கு மேலாக உலைக்களத்தில் கருத்தோட்டத்தின் மீதான ஈர்ப்பே, அதனை அவர் அப்படி வாசிக்க வைத்திருக்குமென நம்புகிறேன்.

"போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த பெருமைக்குரியவர்" எனவும், "எம் விடுதலைப் போராட்ட வாழ்வையும், வரலாற்றையும் தமிழீழ இலக்கிய இயக்கத்துக்குள் முதன்மைப்படுத்தி, தமிழ்த் தேசிய பிரக்ஞையை விழிப்புறச் செய்ய உழைத்தவர்" எனவும், எம் தேசியத் தலைவரால் விதந்து பாராட்டுப்பெற்ற புதுவை அண்ணரைப் பற்றி நான் சொல்ல என்னதான் உள்ளது.

இலக்கிய வித்தகரும், பெருங் கவிஞருமான அவரது நூலுக்கு, கருத்து எழுதுவதற்கு வாசகன் என்ற தகுதிநிலை போதுமெனக் கூறிய புதுவை அண்ணரது வார்த்தைக்குக் கட்டுண்டு எழுதியுள்ளேன்.

எமது விடுதலைப்போர் எதிர்கால மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளாகும் காலம்வரும். அவ்வேளையில், விடுதலைப்போராட்டம் கடந்து வந்த வரலாற்றுப் பாதையின் போக்குகளையும், இந்தப் போருடன் வாழ்ந்த மானிடரின் மன உணர்வுகளையும், சொல்லும் பெட்டகமாக உலைக்களம் திகழும் என நம்புகிறேன். ♦

# சுகாதாரமான உணவை உண்போம்

'சுத்தம் சுகம் தரும்' இது முதுமொழி. ஆனால், சுத்தத்தை முறையாகப் பேணுபவர்கள் எத்தனைபேர். அன்றாடம் இரண்டு, மூன்றுவேளை



நன்றாகக் குளித்து, தூய்மையான ஆடைகள் அணிவதன்மூலம் தூய்மையைப் பேணிவிடமுடியாது.

பதாலும், கொதித்தாறிய நீரைப் பருகாமையினாலே நோய்கள் ஏற்படுகின்றன.

உணவுக் கடையில் உணவைத் தயாரிப்பவர் அல்லது உணவைப் பரிமாறுபவர், உணவுக் கடையில் பாவிக்கப்படும் குடிநீர், பயன்படுத்தப் படும் மூலப்பொருள், உணவு சேமிக்கப்படும் இடம், உணவு பாதுகாக்கப்படும் முறை, கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்படும் முறை, உணவுக் கடையின் சூழல் என்பன அசுத்தமாக இருப்பதனால், தொற்றுநோய்கள் பரவக்கூடிய சாத்தியம் அதிகரிக்கின்றது.

சுகாதாரமற்ற உணவுக் கடைகளின்மூலம், பெரும்பாலும் பரவக்கூடிய நோய்கள் நெருப்புக்காய்ச்சல், வயிற்றுளைவு, செங்கமாரி, கொலரா என்பனவாகும். அண்மைக்காலங்களில் எமது மாவட்டத்தில் பரவிய நெருப்புக்காய்ச்சல் பெருமளவில் தொற்றுவதற்குச் சுகாதாரமற்ற உணவுக் கடைக்குச் செல்லும்

# சுகதேகியாக நாளும் வாழ்வோம்

குறிப்பாக, உணவு விடயத்தில் தூய்மையாக இருப்பதன்மூலம், பெருமளவு நோய்கள் வருவதைக் கட்டுப்படுத்தமுடியும். தற்போது வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளில் - குறிப்பிடத்தக்க நோயாளிகள் வயிற்றோட்டம், நெருப்புக் காய்ச்சல், செங்கமாரி போன்ற நோய்களுடன் வருகின்றனர். இத்தகைய நோய்களுக்கு முக்கிய காரணம் - அவர்களின் உணவுப் பழக்கவழக்கங்களும், உணவுமுறைகளில் சுத்தம் பேணப்படாமையுமாகும்.

குறிப்பாக - சிறுவர்கள், தொழில் நிமித்தம் வெளியிடங்களுக்குச் செல்வோர், கல்விகற்க வெளியிடங்களில் தங்கியிருப்போர், கடை உணவுப் பிரியர்கள் ஆகியோர் தங்களது உணவுத் தேவையை நிவர்த்தி செய்ய உணவுக்கடைகளை நாடுவது தவிர்க்கமுடியாதுள்ளது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்கள சுகாதாரம் பேணத்தவறிய உணவுக் கடைகளில் உணவுகளை உண்வுகளை விநியோகிக்கும் ஸ்தாபனங்களே பெருமளவில் காரணமாக இருந்தன.

**மக்கள் சுகாதாரமான, பொருத்தமான உணவுக்கடைகளை இனங் காண்பது எப்படி?**

ஒரு சுகாதாரமான உணவுக் கடை பின்வரும் பண்புகளையுடையதாக இருக்கவேண்டும்.

- கடையின் சூழல் தூய்மையாக இருத்தல்.
- போதிய இடவசதி, வெளிச்சம் என்பன இருத்தல்.
- நிலம், சுவர், சீலிங் என்பன தூய்மையாகவும், தொற்று நீக்கம் செய்யக்கூடியதாகவும் இருக்கும்.
- உணவுப்பொருட்களை மூடி வைத்தல், கண்ணாடிப் பெட்டியினுள் வைத்தல்.
- உணவுப்பொருட்களை கையாளுவதற்குக் கரண்டி, கத்தி, இடுக்கி போன்ற உபகரணங்கள் இருத்தல்.
- உபகரணங்களைக் கழுவி தொற்றுநீக்கிப் பாவித்தல்.
- கை கழுவுவதற்குப் போதிய அளவு நீர், சவர்க்காரம் என்பன இருத்தல்.
- கழிவுப்பொருட்களை உடனுக்குடன் சேர்த்து அகற்ற, மூடியுள்ள கொள்கலன்கள் இருத்தல்.
- உணவு பரிமாறுபவர், உணவு தயாரிப்பவர் சுத்தமான உடை அணிந்திருத்தல்.
- உணவுக்கடை ஊழியர்கள் நகம், தலைமயிர் வெட்டிச் சுத்தமாக இருத்தல்.
- உணவுக்கடை ஊழியர்கள் வருடாந்தம் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல்.
- உணவு தயாரிக்கும் இடத்தில் பறவைகள், விலங்குகள் என்பன இல்லாதிருத்தல்.
- மலசலகூடம் உரிய தூரத்தில் அமைக்கப்பட்டிருப்பதுடன், ஒழுங்காகப் பராமரிக்கப்படல்.

**மக்கள் என்ன செய்யவேண்டும்?**

- சுகாதாரமற்ற உணவுக்கடைகளுக்குச் செல்வதைத் தவிர்த்தல்
- உணவுக்கடைகளில் எப்போதும் கொதித்தாறிய நீரையே அருந்துதல்.

மேலே கூறப்பட்ட உணவுக் கடைகளுக்குரிய வசதிகள் குறைவாகக் கிடைப்பின், உரிமையாளரிடம் சுட்டிக்காட்டுவதுடன் தேவையானவற்றைக் கேட்டுப்பெறுதல்.

சுகாதாரமற்ற உணவுப்பொருட்களை விநியோகிக்கும் கடைகள், நாட்பட்ட உணவுப் பொருட்களை விநியோகிக்கும் கடைகள் பற்றி, அந்தப் பிரதேசத்திற்குரிய பொது சுகாதார பரிசோதகர், சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பிரதேசசபை செயலாளர் ஆகியோருக்கு அறிவித்தல் என்பனவாகும்.

**இ.சிறிநாத்**
**4 ஆம் வருடம்,**
**யாழ்.மருத்துவபீடம்.**

# மிருகங்கள் மூலம் பரவும் நோய்கள்

பகுதி 2

**(பிளேக் தொடர்ச்சி)**

இந்த நோய் மனித குலத்திற்குப் பேரழிவை ஏற்படுத்துவதனால், கொள்ளைநோய் என்ற காரணப்பெயரும் இதற்குச் சூட்டப்பட்டுள்ளது. எலிகளையும், தெள்ளுகளையும் முற்றாக ஒழித்து, மனித குலத்தை இந்நோயினால் அழியாது காப்பது, எம் ஒவ்வொருவரதும் கடமையாகும். இந்த நோய்க்குரிய குணங்குறிகளுள் ஒன்றாகக் காய்ச்சலும் காணப்படும்.

## கசநோய் (TUBERCULOSIS)

இந்த நோய் மைக்கோ பக்டீரியம் ரியூபக்குளோசிஸ் (**MYCOBACTERIUM TUBERCULOSIS**) என்னும் பற்றீரியாவினால் உண்டாகும். மாடுகளுக்கும், மனிதர்களுக்கும் இந்த நோய் ஏற்படலாம். ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றும். இது மாட்டிலிருந்து மனிதருக்குப் பாலின்மூலம் பரவக்கூடியது. பாலை நன்கு காய்ச்சிக் குடிப்பதன்மூலம், இந்த நோய் மாட்டிலிருந்து மனிதருக்குத் தொற்றுவதைத் தடுக்கலாம். இந்த நோயுற்ற மனிதர்கள் இருமும்போதும், கதைக்கும்போதும், தும்மும்போதும் இலட்சக்கணக்கான சிறுதுளிகளாக வெளியேறும் உமிழ்நீர், சளி போன்றவற்றாலும், வெளியே துப்பப்பட்ட சளி, எச்சில் போன்றவை உலர்ந்து காற்றுடன் கலப்பதாலும், நோயாளி பயன்படுத்திய உண்கலங்கள், குடிகலங்கள் என்பனவற்றாலும், இந்த நோய் சுகதேகிகளுக்குத் தொற்றும்.

இந்த பற்றீரியா தொற்றியவர்களுள் சுமார் 10 வீதமானவர்கள் - உடனடியாகவே கசநோயாளிகளாகிவிடுவர். ஏனையோரிற்கு இயற்கையாகவே இருக்கும் எதிர்ப்புச் சக்தி காரணமாக, இக்கிருமிகளினால் உடனடியாக நோயை ஏற்படுத்த முடிவதில்லை. இதனால் பிறநோய்கள், போஷாக்கின்மை போன்ற காரணிகளால் நோய்த் தொற்று ஏற்பட்டவரின் நோய் எதிர்ப்பு சக்தி குறையும்வரை, காத்திருப்பு நிலையில் (**LATENT PHASE**) இக்கிருமிகள் காத்திருக்கும். நோய் எதிர்ப்புச் சக்தி குறையும் வேளையில், நோயை ஏற்படுத்தும். தும்மும்போதும், இருமும்போதும் ஓர் துணியினால் வாய், மூக்குப் போன்றவற்றை மூடுவதன் மூலமும் கண்டபடி எச்சில், சளி உமிழ்வதைத் தவிர்ப்பதன்மூலமும், இந்த நோய் பரவாது தடுக்கலாம். மேலும், அதிக மக்கள் நிறைந்திருக்கும் சினிமாத் தியேட்டர்கள், திருவிழாக்கள் போன்றவற்றிற்குச் செல்வதைத் தவிர்த்தும் - இந்நோய் வருவதைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

இந்த நோயின் குணங்குறிகளாக - வீரியம் குறைந்த காய்ச்சலும், உடல் அசதி, சோம்பல் என்பனவும் ஏற்படலாம். கசநோய் நுரையீரலில் மாத்திரமன்றித் தோல், எலும்பு, மூளை உட்பட உடலின் பல பாகங்களிலும் ஏற்படக்கூடியது. மயிரைத் தவிர, சகல உறுப்புகளிலும் ஏற்படக்கூடியது எனக் கூறப்படுகிறது.

## முனி அல்லது அந்திராக்ஸ (ANTHRAX)

இந்த நோய் தாவர போஷணிகளான - ஆடு, மாடு, செம்மறியாடு போன்றவற்றைத் தாக்கும். பசிலஸ் அந்திறாசிஸ் (**BACILLUS ANTHRACIS**) பற்றீரியா இந்த நோயை ஏற்படுத்தும். இந்த நோயினால் ஆடுகள், மாடுகள் இறக்கும்போது - வாய், குதம் போன்ற உறுப்புகளினூடாகச் சிறிதளவு இரத்தம் வெளியேறும். இரத்தத்துடன் வெளியேறும்போது எளிதாக அழியக்கூடிய நிலையிலிருக்கும் இந்த பற்றீரியா, வெளியிலுள்ள காற்றுடன் தொடுகையுற்றதும், இது ஈரலிப்புடைய $100^{\circ}$ C வெப்பத்தை 10 நிமிடங்களுக்குத் தாங்கியும், உலர் வெப்பமாக $140^{\circ}$ C வெப்பத்தை 3 மணித்தியாலத்திற்குத் தாங்கியும், அழியாதிருக்கும் கவசத்தைப் பெற்றுவிடும்.

இது உணவின்றி, நெடுங்காலம் வாழும் இயல்பையும், கண்டம் விட்டுக் கண்டம் சென்றாலும் உயிர்வாழக்கூடியது.

**ச.ஆ.கோபாலமூர்த்தி**

(தொடரும்.....)

# அமெரிக்க ட்ரக் வண்டி வெடிகுண்டால் தகர்ப்பு!



அமெரிக்க இராணுவத்தின் விநியோக ட்ரக் வண்டி ஒன்று, நேற்று ஈராக்கில் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அங்கு கூடிய ஈராக்கியர்களால் அந்த ட்ரக் வண்டி கொள்ளையடிக்கப்பட்டது.

ராஜி என்ற நகரில் நடைபெற்ற இத்தாக்குதலினால் ஏற்பட் சேத விபரங்கள் தெரியவில்லை.

# அமெரிக்காவைத் தாக்குவதற்கு அல் - கொய்டா மீண்டும் முயற்சி!

கோடைக்கால இறுதியில், அல் - கொய்டா அமைப்பு மீண்டும் அமெரிக்காவைத் தாக்கவுள்ளதாக, அமெரிக்க விமானசேவை நிறுவனங்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

2001 செப்ரெம்பர் 11 நடைபெற்ற தாக்குதல் போன்று, விமானங்களைக் கடத்தியோ அல்லது தற்கொலைத் தாக்குதல் மூலமோ புதிய தாக்குதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படலாம் என, அமெரிக்க உள்துறைப் பாதுகாப்புத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

அதேசமயம் - இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள அமெரிக்க நிலையங்களுக்கும் தாக்குதல் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

தரையில் தாக்குதல்களை மேற்கொள்வதைவிட, வான் வழியாகத் தாக்குவதே சிறந்ததென, அல் - கொய்டா இயக்கத்தினர், தமக்குள் பரிமாறிக்கொண்ட இரகசியச் செய்திகள் மூலம் தெரியவந்துள்ளதாக அந்தத் திணைக்களம் கூறுகின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டு தாக்குதல் - நான்கு பயணிகள் விமானங்கள் கடத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

## இஸ்ரேலின் இரும்புவேலிக்கு கண்டனம்

மேற்குக்கரையில் அமைக்கப்படும் இஸ்ரேலின் பாதுகாப்பு வேலிக்கு, பலஸ்தீனத் தலைவர்கள் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் நடத்திய பேச்சுக்களின்போது, இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோன், "நல்ல வேலிகள் நல்ல அயலவர்களைத் தரும்" என்றார்.

பேர்லின் சுவர் போன்று இரும்பினாலான இந்த வேலி, உறவுகளைச சந்தேகத்துக்கிடமாக வைத்திருக்கவே உதவுமென, பலஸ்தீனத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வேலி அமைக்கப்படுவதற்கு அமெரிக்காவும் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

உலகவலம்

# விநோதமான பழக்கமுடைய ஆரம்ப ஆசிரியருக்கு சிறை!

பிரிட்டனில், 12 வயதான பாடசாலைச் சிறுமியை, நிர்வாணமாக்கிய குற்றத்துக்காக, ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அன்ரூ ரோப்சன் (வயது 34) என்ற இந்த ஆசிரியர், கடந்த 2002 ஆம் ஆண்டு - தான் கற்பிக்காத பாடசாலை ஒன்றினுள் நுழைந்து 12 வயதுச் சிறுமியை நிர்வாணமாக்கி, தானும் நிர்வாணமாக இருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். இவரின் இச்செயலை - அவ்வீதி வழியாகச் சென்ற பலரும் கண்டுள்ளனர். இறுதியில் - பொலிஸார் வரவழைக்கப்பட்டு, இந்த ஆசிரியர் கைதுசெய்யப்பட்டார்.

இவர் - இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்னர், இரு இளம் பெண்களுக்கு அருகே சென்று, தன்னை நிர்வாணமாக்கியபடி நின்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர் - இவ்வாறு அடிக்கடி நடந்துகொண்டதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்ததாக சதர்லாந்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் தெரிவித்தார்.

# சியராலியோன் கிளர்ச்சிக்குழு தலைவர் சிறையில் உயிரிழப்பு!

(பிரீரவுன்)

ஆபிரிக்க நாடான சியராலியோனில், பத்துவருட காலமாக கொடுமையான தர்பார் நடத்திய கிளர்ச்சித் தலைவர் போடேசானுக், நேற்றுமுன்தினம் காலமானார். இவர் மேற்கொண்ட குற்றங்கள் குறித்து, தற்போது ஐ.நாவின் போர் குற்றவியல் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டார்.

கடந்த வருடம் இவருக்கு ஏற்பட்ட பாரிசவாத நோயே, இவரின் மரணத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. சானுக்கின் புரட்சிகர ஐக்கிய முன்னணி என்ற கிளர்ச்சிக் குழு, சியராலியோனில் கடந்த வருடத்தில் முடிவுக்குவந்த- சிவில் யுத்தத்தில், பல கொடூரமான செயல்களை மேற்கொண்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

கற்பழிப்புகள், தலைவெட்டுதல், உடல் உறுப்புக்களை வெட்டுதல் போன்ற இவரின் கிளர்ச்சிக்குழுவின் நடவடிக்கையால ஆயிரக்கணக் கானவர்கள் பாதிக்கப்பட்டனர்.

இவர், கடந்த 2000 ஆம் ஆண்டு கைதானார். இவரின் உடல்நிலையைக் கருத்திற்கொண்டு, இவர் மீதான குற்றச்சாட்டுக்களைக் கைவிடுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள், நீதிமன்றால் கடந்தவாரம் நிராகரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சதாமைத் தேடி தொடர்ந்து அமெரிக்கப் படை வேட்டை!

(பக்தாத்)

ஈராக்கின் திக்ரிட் நகரில், சதாமைத்தேடி - அமெரிக்கப்படைகள் நேற்று பெரும் நடவடிக்கையை மேற்கொண்ட அதேசமயம், அப்படையினருக்கு எதிராக, ஈராக்கிய மக்கள் பெரும் கோஷமிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

'அமெரிக்காவை அழி' என்று கூறியவாறு, ஏற்கனவே குண்டுவெடிப்பினால் சேதமடைந்த அமெரிக்க கவசவாகனம் ஒன்றை நோக்கி கற்களை அவர்கள் வீசினர்.

இதேவேளை - சதாமின் ஆட்சிக்கு அஞ்சி, சவுதி அரேபியாவில் தஞ்சமடைந்திருந்த சுமார் 200 ஈராக்கியர்கள், 13 வருடங்களின் பின முதற்தடவையாக ஈராக் திரும்பினர்.

# நாகா கிளர்ச்சிகளுக்கு ஆதரவு; பிரிட்டன் பிரஜை ஒருவர் கைது!



இந்தியாவின் நாகலாந்து கிளர்ச்சியாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, பிரிட்டன் பிரஜை ஒருவர் - இந்தியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

எடின்பரோவை நகரைச் சேர்ந்த டேவிட் வோர்ட் எனப்படும் இவர், கடந்த ஞாயிறன்று - நாகலாந்து மாநிலத்தில் வைத்துக் கைதானார்.

எனினும், வோர்ட் - நாகா பழங்குடிகள் அதிகமாக வதியும் பகுதிகளில் நடைபெறும் இந்தியப் பொலிஸாரின் மனித உரிமை மீறல்களைப் பதிவுசெய்யும் மனிதஉரிமை அமைப்பான 'நாகா விஜில்' என்ற அமைப்பின் தலைவர் எனக் கூறப்படுகிறது.

இதனை மறுத்துள்ள இந்திய அதிகாரிகள், இவர் - நாகா கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறுகின்றனர். இவரிடம் குடிவரவு, குடியகல்வு ஆவணம் எதுவும் இருக்கவில்லை, பிரிவினையாளர்களுக்கு ஆதரவளித்தாரென நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, இவரைக் கைது செய்தோம் என், நாகா பொலிஸார் கூறுகின்றனர்.

வோர்ட், ஏற்கனவே 1992 இலும் இவ்வாறு நாகலாந்தில் வைத்துக் கைதாகி விடுதலையானவர். நாகா தீவிரவாதிகளுடன் ஜீப்பில் சென்றுகொண்டிருந்தபோதே, தற்போது இவர் கைதானதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

இவரைப்போன்றே - மற்றுமோர் பிரிட்டிஷ் பிரஜையான பீற்றர் பிளிக் என்பவர், மேற்குவங்காளத்தில் விமான மூலம் ஆயுதப்பொதிகளைத் தீவிரவாதிகளுக்கு போட்ட குற்றத்துக்காக ஆயுள்தண்டனை அனுபவிக்கிறார்.

## விரைவு ரயில் சாதனை படைத்தது



புதிதாகத் தயாரிக்கப்பட்ட யூரோ ஸ்ரார் என்ற விரைவு ரயில், முன்னைய அதிவிரைவு ரயில்களின் வேகங்களை முறியடித்துச் சாதனை படைத்துள்ளது. மணிக்கு 208 மைல வேகத்தில் இந்த ரயில் பயணித்துள்ளது. 1979 இல், பிரிட்டனின் அதிவிரைவு ரயிலின், மணிக்கு 186 மைல வேகம் என்ற சாதனை, யூரோ ஸ்ராரினால் முறியடிக்கப்பட்டுள்ளது.

# பெல்பாஸ்டில் வாகனங்கள் கடத்தல்: வெடிகுண்டு செயலிழப்பு படை விரைவு!

(லண்டன்)

வட அயர்லாந்து - பெல்பாஸ்ட் நகரில், இரு வாகனங்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் கடத்தப்பட்டதைத் தொடர்ந்து, இராணுவ குண்டுச் செயலிழப்புப் படையினர் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் பல்வேறு நகர வீதிகள் சுற்றிவளைக்கப்பட்டன. வாகனப் போக்குவரத்துக்கள் வேறு வீதிகள் வழியே திசை திருப்பப்பட்டன.

பஸ் ஒன்று கடத்தப்பட்டு, பின்னர் - சந்தேகத்திற்கு இடமான பார்சல் ஒன்றுடன் அநாதரவான நிலையில் மீட்கப்பட்டது. இரண்டு முகமூடி மனிதர்கள் - பயணிகள் எவருமின்றிச் சென்ற இந்த பஸ்ஸை, கடத்திச் சென்றிருந்தனர்.

அதேசமயம், மர்மப்பார்சல் ஒன்று சனிசைட் வீதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. அநாமதேய தொலைபேசி அழைப்பையடுத்தே, இந்தப் பார்சல் வீதியில் கிடந்தமை தெரியவந்தது.

இதனிடையே - வான் ஒன்றும் கடத்தப்பட்டதாக வெளியான புரளியால், பெல்பாஸ்ட் நகரில் பதற்ற நிலை காணப்பட்டது.


யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
நிறுவுநர் நினைவுநாளும் பரிசுத்தினமும்

காலம் - 2003.08.01 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு.
நிகழ்விடம - தம்பர் மண்டபம்.
தலைமை - வண.செ.பி.நேசகுமார் (கல்லூரி பழைய மாணவனும், குருமுதல்வரும், யாழ்ப்பாணம் அங்கிலிக்கன் திருச்சபை.)
பிரதம விருந்தினர் - கலாநிதி ஆர்.ஸ்ரீகரன். (மூத்த விரிவுரையாளர், இரசாயனத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.)
பரிசு வழங்கல - திருமதி சுஜேந்தினி ஸ்ரீகரன்.
பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(சி-1282) அதிபர், ஆசிரியர், மாணவர்.

சிறுவிளம்பரம்
விற்பனைக்கு
தச்சுவேலை செய்யும் இயந்திரங்கள் (சைனா) 10",12",14",16" ஆகியனவும் ஜெனரேட்டர்கள், வெல்டிங் ட்ரான்ஸ்போமர், எலக்ரிக் றில்லர்கள், வேலைப்பாடு சீவும் றவுட்டர்கள், அலுமினியக் கட்டிங் மெஷின் என்பனவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு - கி.சுதாகரன், இல.20, 2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P 0777295998 (437)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்





10.30, 2.30, 6.30, 9.30
ரீக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம். (சி-1137)
இயக்கம்: விக்ரமன்

நிரஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், பிரியங்கா, விவேக் நடித்த
காதல் சடுகுடு
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
BLUE STREAK
இரவுக் காட்சி. 8.45 (பு.நே)
(சி-1138)

பெயர் மாற்றம்
யார்க்கரு துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி வேலாயுதம் ஆகிய நான் 01-08-2003 முதல் எனது பெயரை **சின்னத்தம்பி ராகுலன்** எனப் பெயர் மாற்றம் செய்கிறேன் என, இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறேன்.
யார்க்கரு
துன்னாலை தெற்கு,
கரவெட்டி
சின்னத்தம்பி வேலாயுதம்

நமது ஈழநாடு
The Namathu Ezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறுவர் இல்ல விபரங்களை சேகரிக்க பிரதேச செயலர்களுக்கு அறிவுறுத்து

## யாழ்.மாவட்ட நீதிமன்றம் கடிதம்

யாழ்.மாவட்டத்திலுள்ள - ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள சிறுவர் பராமரிப்பு இல்லங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டி, அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள நீதிமன்றங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, யாழ்.மாவட்ட நீதிமன்றம் சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள, சிறுவர் பராமரிப்பு நிலையங்களின் விபரங்கள் மற்றும் அச்சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைத் திரட்டி, மூன்றுவார காலத்தினுள் அருகிலுள்ள நீதிமன்றங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி. விக்னராஜா சகல பிரதேச செயலர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார்.

# கல்வி அமைச்சு அலுவலகம் முன் ஆசிரியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் அலுவலகத்திற்கு முன்னால் - இன்று இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

ஆசிரியர்களுக்குள்ள சம்பள முரண்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மாற்றங்கள் ஆகியவற்றிற்கு, விரைவாக உரிய தீர்வைக் காணக் கோரியும்,

கல்வியைத் தனியார் மயப்படுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை எதிர்த்துமே இன்றைய ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. (01)

# இடைக்கால நிர்வாகத் திட்டத்திற்கு எதிராக அம்பாறையில் போராட்டம்!

## அடுத்தமாதம் நடத்தத் தீர்மானம்

இடைக்கால நிர்வாகத்திற்கு எதிராக, எதிர்வரும் 20 ஆம் திகதி அம்பாறையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு பாதுகாப்பு அமைப்பின் ஏற்பாட்டில், அம்பாறையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலே, மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதை எதிர்த்தும், வடக்கு - கிழக்கைப் பிரிக்கவும் கோரியே, மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தினை வடக்கு - கிழக்கு பாதுகாப்பு அமைப்பு நடத்தவுள்ளது.(01)

# மீனவர்கள் பிரச்சினை ஆராய கண்காணிப்புக்குழு அழைப்பு!

குடாநாட்டிலுள்ள - மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, சர்வதேச கண்காணிப்புக் குழு ஆராய்ந்து வருகிறது.

வடமராட்சிப் பிரதேசத்தில், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக,ஆராயும் கூட்டம் எதிர்வரும் 3 ஆம் திகதி, பருத்தித்துறையிலுள்ள இராணுவத்தினரின் 524 ஆவது பிரிவுக் கட்டளை அதிகாரிகள் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக, மீனவ சங்கப் பிரதிநிதிகளுக்கு - சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ் குடும்பத்தைச் சேர்ந்த கனடா பிரஜாவுரிமை பெற்றவரும், தற்போது இங்கு சொந்த தொழில் புரிபவரும், செவ்வாய் குற்றமற்ற 40 வயதுடைய மண மகனுக்கு, படித்த அழகான மணமகள் தேவை. தயவுசெய்து ஜாதக குறிப்புடன், புகைப்படத்தையும் இணைத்து அனுப்பவும்.

விளம்பர இல.11,
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(440)

## யாழ்.மாவட்ட...

விழிப்புடனும், விவேகத்துடனும் அனைத்துத் திணைக்களங்களும் செயற்பட்டு- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சட்ட நகலை...

இதேவேளை - இடைக்கால நிர்வாகம் குறித்து, விடுதலைப் புலிகளுடன் பேசுவதில் அவதானம் தேவை என்றும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக, தனது அதிருப்தியையும் - அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி வெளியிட்டதாகத் தெரிய வருகின்றது.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.85 | 97.31 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.02 | 158.42 |
| 1 யூரோ | 110.52 | 111.72 |
| 1 சுவிஸ் பிராங் | 71.23 | 72.44 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 63.87 | 64.88 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.90 | 25.90 |

# எச்சரிக்கை மீறி தொழில் செய்யு இந்திய மீனவர்கள் அனுமதி பறிப்

## இந்தியக் கடற்தொழில் அதிகாரிகள் உறு

(கொழும்பு)

இலங்கையின் வடபகுதிக் கடற்பரப்பில், அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள், இரண்டு தடவைக்கு மேல் தொழிலில் ஈடுபட்டால் - அவர்கள் கடற்தொழில் செய்வதற்கு அனுமதி மறுக்கப்படுமென, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு - இந்தியக் கடற்தொழில் திணைக்கள அதிகாரிகள், உறுதியளித்துள்ளதாக, இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் சரத் வீரசேகர தெரிவித்தார்.

வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் நிஹால் ரொட்றிகோவுடன்- கடற்படையின் நடவடிக்கைக்குப் பொறுப்பான பணிப்பாளர் நாயகம் சரத் வீரசேகர புதுடெல்கி சென்று, இந்திய கடற்தொழில் அதிகாரிகளைச் சந்தித்து - வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, பேச்சுவார்த்தை நடத்திய போது - இந்தியக் கடற்தொழில் அதிகாரிகள் மேற்கண்டவாறு உறுதியளித்தனர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது, சில விடயங்கள் தொடர்பாக இருநாட்டு அதிகாரிகளும் இணக்கப்பாட்டுக்கு வந்தனர்.

வடக்கு கடலில் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள், கைதுசெய்யப்பட்டு, எச்சரிக்கப்படுவர். அவ்வெச்சரிக்கையைத் துஷ்பிரயோகம் செய்து அத்துமீறிக் தொழிலில் ஈடுபட்டால், மீன்பி கான அனுமதியை ரத்துச் செ டன், இவர்களுக்கு வழங்க எரிபொருளும் ரத்துச்செய்யப்

இந்தியக் கடற்பரப்பில் மீறிச் சென்றிருந்தபோது, கைது யப்பட்ட இலங்கை மீனவர் உடனடியாக விடுதலை செய் டன் - அவர்களின் வள்ளங் வழங்கவும் இணக்கம் காண தாக, சரத் வீரசேகர தெரிவி

இதேவேளை - தமிழ்நாட்டி மேஸ்வரம், நாகப்பட்டினம் யில் தடுத்துவைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மீன்பிடி ளங்கள் கடல்மார்க்கமாக எ வரப்படும். இவற்றில் பழுதல வள்ளங்களைத் திருத்துவத இங்கிருந்து பொறியியலாள ஒன்று விரைவில் இந்தியா வுள்ளதாகவும் சரத் வீரசேகர வித்தார்.

## பாகிஸ்தான் அமைச்சர் வருகை

பாகிஸ்தான் உள்துறை மற்றும் போதைவஸ்து எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான அமைச்சர் சையற் பைசர், இருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கைக்கு வரும் பாகிஸ்தான் உள்துறை மற்றும் போதைவஸ்து எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான அமைச்சர், அரசியல் தலைவர்கள் பலரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதுடன், பயங்கரவாதம் மற்றும் போதைவஸ்து ஒழிப்பு ஆகிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயவுள்ளார். (01)

## மீனவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள - கடற்தொழிலாளர் சங்க நிர்வாக உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல், இன்று பிற்பகல் 2.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து கடற்தொழிலாளர் சங்க நிர்வாகிகளை- தவறாது கலந்து கொள்ளுமாறு, யாழ்.மாவட்ட அரசியற்துறையினர் தெரிவித்துள்ளனர்.

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நிறுவுநர் நாளும், பரிசளிப்பு விழாவும் - நாளை காலை 10 மணிக்கு தம்பர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. யாழ்ப்பாணம் அங்கிலிக்கன் திருச்சபையின் குருமுதல்வர் வண. செ.வி.நேசகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி ஆர்.ஸ்ரீகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## சிப்பாயை...

இந்தச் சம்பவம் தொடர்பாக- பொதுமகனைத் தாக்கிய இராணுவச் சிப்பாயினை அடையாளம் கண்டு, விசாரணைகளை மேற்கொள்ளும் முகமாகவே, பொலிஸாரின் ஒத்துழைப்பு வேண்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்.குருநகர் மக்களுக் கூரைத்தகடு விநியோக

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியிலுள்ள மக்களுக்கு - இந்து கலாசார அமைச்சினால் கூரைத்தகடுகள், சீமெந்து என்பன வழங்கப்பட்டன.

குருநகர் பகுதியிலுள்ள பல வீடுகள் - கடந்தகால யுத்தம் காரணமாக உடைந்தும், சிதைவடைந்தும் உள்ளன. இவ்வாறாக காணப்படும் வீடுகளைத் திருத்தும் பொருட்டு - 6 ஆயிரம் கூரைத் தகடுகளும், 40 ஆயிரம் சீமெந்துப் பைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு - நேற்றையதினம் குருநகர் ஐக்கிய முன்னணி சனசமூக நிலையம், சென்.றொக் சனசமூக நிலையம், குருநகர் தொழில் சங்கம், சீநோர், சனசமூக நிலையம் ஆகிய சனசமூக நிலையங்களில் பெற்றன. இந்து கலாசார அ மகேஸ்வரன் இப்பொருட் வழங்கினார்.

பயனாளிகளைத் தெரிவுசெ வகையில், கட்டடத் தொழி உத்தியோகத்தர்கள், வீடு நேரடியாகச் சென்று பார்வை தைத் தொடர்ந்து, கட்டடப் பெ கள் உடனடியாக தேவை அடிப்படையில் கையளிக்கப்ப ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். குடாநாட்டில்.

கைகளை பொலிஸார் மேலும் எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றியும், உயர்பாதுகாப்பு வலயம், யாழ். குடாநாட்டில் பொலிஸாரின் நடவடிக்கைகள் எந்தநிலையிலுள்ளது என்பன குறித்தும், இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இதேவேளை - யாழ்.மாவட்டத்தில் நீதிமன்றங்கள் மற்றும் திணைக்களங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக, இலங்கைக்கான பிரித்தானிய உதவி ஸ்தானிகர் நேற்று யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி. விக்னராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்.குடாநாட்டில், சட்டத் பேணுவதில் பொலிஸாரின் பாடுகள் தொடர்பாகவும், பொ களுடன் நல்லுறவைப் பேணு பொலிஸாருக்குள்ள அக்கறை பாகவும், யாழ்.மாவட்ட நீதிபதி விக்னராஜாவிடம் - கேட்ட கொண்ட இலங்கைக்கான பி னிய உதவி ஸ்தானிகர், யாழ். டத்தில் நீதிமன்றங்களின் பாடுகள் தொடர்பாகவும் - ச ஒழுங்கைப் பேணுவதிலுள்ள ப னைகள் தொடர்பாகவும் விரிவ கேட்டறிந்துகொண்டதாகவும் வருகிறது.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியி